# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

மலர்: VII இதழ்: 12 | மே 2022 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: VII Issue: 12 | May 2022 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20





மருந்தில்லா மருத்துவம்

-ஆசிரியர் கடிதம்

வெற்றித் தடம் பதித்த "அழகப்பா" அன்பழகன்!

வறுமையிலிருந்து வளமைக்கு வழிகாட்டிய புத்தகம்!

## தமிழக ஆளுநர் தனி ஆட்சி நடத்துகிறாரா?
## - தமிழகத்தில் நடக்கும் குழப்பம்!

# LIBRARY

## (A school with out teacher)





With the advent of smart phones and kindle, it seemed that the era of reading proper paperback books were over. However, even today if you ask a book lover about their fantasy most of them would say: 'reading a book in a nook of a beautiful library'.

The fact of the matter remains that even if the technology is progressing, nothing can take away the charm of reading a paperback book or even the romance of being in a library surrounded by books!

For all those reading addicts, here is the must-visit libraries in Tamil Nadu amazing collections:



**Concept by:**
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (psychology)

**Saraswathi Mahal Library or Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library.**

It is housed within the campus of Thanjavur Palace and had started as a royal library for the Nayak Kings of Thanjavur.

It has a rare collection of palm leaf manuscript in various regional languages of India. It came under the possession of the state of Tamil Nadu in the year 1918. In the year 1998, the library installed computers to computerise library activities. The library preserves all the manuscripts in the form of microfilms.



It serves as a depository library for the Thanjavur Maharaj Serfoji's Saraswathi Mahal Library is one among a few libraries in the world with texts of the medieval period. It is a treasure house of knowledge carefully fostered and nurtured by successive dynasties of Nayakkas and the Marathas of Thanjavur. It contains rare valuable collection of manuscripts, books, maps and paintings on all aspects of Art, Culture and Literature. The Encyclopedia Britannica, in its survey of the Libraries of the world, describes it as " the most remarkable Library in India". This Library was made a Public Library in 1918. Timings: 10.00 am to 1.00 pm and 1.30 pm to 5.30 pm. Closed on Wednesdays and Govt.Holidays.

**Anna Centenary Library, Chennai**

It was inaugurated on September 15, 2010. The total built up area of this centralised air-conditioned lbrary is 3.75 lakh sq. ft., which encompasses ground and eight floors. It has a collection of 5 lakh books. It also has a Braille section to cater to the needs of the blind readers. It has a huge Conference Hall that can facilitate 150 members.

**Connemara Public Library, Chennai**

It was established in the year 1896. It is one of the four National Depository Libraries, which receive a copy of all books, newspapers and periodicals published in India Connemara Public Library is a historic old library located att Pantheon Road in the area known as Egmore, which is the neighborhood of Chennai, Tamil Nadu, India. It was established at the end of the 19th century and is situated in a small cultural area, right near National Art Gallery and historic theater. Its collection includes not only books and periodicals, but as well as a large number of manuscripts and Braille books. An eight-storey structure, the Anna Centenary Library undoubtedly makes for South-Asia's largest library. It is a perfect retreat for all those who look forward to take a break by simply reading a book amidst the calm atmosphere of the library.

# மருந்தில்லா மருத்துவம்

**அ**ன்புடையீர் வணக்கம்!

கொஞ்ச காலம் நாம் மறந்து இருந்த கொரோனா என்ற சொல் மீண்டும் ஊடகங்களில் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. அதன் கொடுமையை நாம் அனுபவித்தவர்கள் என்றாலும் அது தந்த வடுக்களை இன்னமும் மறக்க இயலாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். அந்த சூழலை இப்போதும் எண்ணிப்பார்த்தால் நெஞ்சுக்குள் ஒரு நடுக்கம் ஏற்படுவதை உணரலாம். ஆங்கில திரைப்படங்களில் புத்தகங்களில் படித்த அத்தகைய சூழல்களை நாம் கடந்த இரண்டு வருடங்களாக அனுபவித்து விட்டோம். குறிப்பாக ஊரடங்கு காலம் அமுல்படுத்தப்பட்ட நேரத்தில் மருத்துவமனைக்கு செல்வதற்கு நாம் தயங்கினோம். மருத்துவமனைகளில் இடமில்லாத காரணத்தால் வீடுகளிலிருந்து வீட்டில் கிடைக்க கூடிய பொருட்களிலிருந்து நம்முடைய உடலை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம் என்கிற சூழலை அரசாங்கமும் நம்மைச் சுற்றியுள்ள உறவுகளும் உருவாக்கின. அதாவது மருந்து இல்லா மருத்துவம் என்ற சூழலை நமக்குள் நாமே உருவாக்கிக் கொண்டோம்.

"நம் பாட்டி தாத்தா காலத்தில் தனியார் மருத்துவமனைகளை அரிதாகவே பார்க்கமுடியும். அவசரத் தேவைகளுக்கு, மருத்துவர்கள் நோயாளியின் வீட்டிற்கே வந்து சிகிச்சை அளித்த நாள்கள் அவை. மக்கள் எந்த மருத்துவமும் தேவையின்றி இயற்கை வேளாண்மை செய்து, உடற்பயிற்சி என்ற பெயரில் தங்களை வருத்திக் கொள்ளாமல் உடல் வருந்த உழைத்து ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். சுத்தமான காற்று, நீர் போன்றவை செலவில்லாமல் கிடைத்தன. ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் வகையில் கட்டப்பட்ட வீடுகளில் நெருங்கிய சொந்த, பந்தங்களுடன் கூட்டமாக சுக, துக்கங்களைப் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்.

இயற்கையுடன் இயைந்து வாழ்ந்ததால் அவர்கள் ஆரோக்கியமாக வாழ இயற்கையும் துணை புரிந்தது. எப்பொழுதாவது உடல்நிலை சரியில்லையென்றாலும், மருத்துவர்களை நாடாமல், மக்கள் தங்கள் முன்னோர்கள் மூலம் தாங்கள் அறிந்திருந்த கை மருத்துவம் என்று சொல்லப்படும் சிகிச்சை முறையையே பெரும்பாலும் பின்பற்றினர். இவை எல்லாமே கனவாகிப்போய் விட்ட இன்றைய சூழ்நிலையில், மருந்தில்லா மருத்துவம் சாத்தியமா?

இன்று நாம் காசு கொடுத்து வாங்கும் தரமற்ற தண்ணீர் முதல் ரசாயன பூச்சிக் கொல்லிகளால் பாதுகாக்கப்பட்ட, செயற்கை உரங்களால் செறிவூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் வரை அனைத்திலும் நம் ஆரோக்கியத்திற்கு எதிரான நச்சுப்பொருள்கள் கலந்துள்ளன. இந்நிலையில் மருந்தில்லா மருத்துவம் பலனளிக்காது என்று முற்றிலும் மறுதலிக்கவும் முடியாது. எதுவெல்லாம் நம் ஆரோக்கியத்திற்கு உகந்தது என்பதை அறிவுபூர்வமாக சிந்தித்து, ஆபத்தானவற்றை அறவே ஒதுக்கி, நம் உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொண்டால் மருந்துகளை நாடுவதன் தேவை வெகுவாகக் குறைந்து விடும்.

சிறிய இடர்ப்பாடுகளான தலைவலி, காய்ச்சல், வயிற்று வலி போன்றவைகளுக்கு வலி நிவாரணிகளை நாடக்கூடாது. பெரியவர்களிடம் நாம் கேட்டுத் தெரிந்து கொண்ட மருத்துவ முறைகளைப் பயன்படுத்தி நிவாரணம் பெறவே முயற்சிக்க வேண்டும். நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் மருத்துவரை (நோய் எதிர்ப்பு மண்டலம்) செயல்பட அனுமதிக்க வேண்டும். அதுவரை சிறு, சிறு வலிகளைத் தாங்கிக்கொள்ள பழகிக் கொள்ள வேண்டும். குழந்தைகளையும் பழக்க வேண்டும்.

மருந்தாக உதவக்கூடிய உணவுப்பொருட்களான மஞ்சள், கருஞ்சீரகம், மிளகு, கடுக்காய், பெருங்காயம், சுக்கு, அதிமதுரம், கிராம்பு போன்றவை கட்டாயம் வீட்டில் இருக்க வேண்டும். தாங்க முடியாத வலியை ஏற்படுத்தக் கூடிய நோய்கள் மற்றும் அறுவை சிகிச்சைதான் ஒரே தீர்வு என்று சொல்லப்படக் கூடிய நோய்களுக்கு மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் பெறுவது அவசியம்தான்.

இவற்றை எல்லாம் விட முக்கியமானது, மன ஆரோக்கியமே. அமைதியான, நல்ல எண்ணங்கள் நிறைந்த உள்ளம் இருந்தால், உடலும் நோயின்றி நலமுடன் இருக்கும். ஆரோக்கியம் என்பது எவ்வளவு பெரிய செல்வம் என்பதையும், என்ன விலை கொடுத்தாலும் அதை வாங்க முடியாது என்பதையும் அதை இழக்கும் பொழுதுதான் உணருகிறோம்.




அப்படிப்பட்ட ஆரோக்கியத்தை நோயாளிகளுக்கு அளிக்கக்கூடிய வாய்ப்பினை இறைவன் தங்களுக்கு அருளிய அருட்கொடை என்று மருத்துவர்கள் எண்ணி சிகிச்சையை ஒரு சேவையாகக் கருத வேண்டும். நோயைப் பற்றிய பயத்தை விட மருத்துவச் செலவை நினைத்து மக்கள் பயப்படும் நிலைதான் இன்று உள்ளது."

எனவே எதிர்வரும் காலத்தில் நமக்கு நாமே பாதுகாத்துக் கொள்ளும் என்ற வகையில் மருந்தில்லா மருத்துவம் அடிப்படையில் நம்மை உருவாக்கிக் கொள்வோம்.

**– எம்.எஸ்.மூர்த்தி**

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 07 மே 2022 டைம்ஸ்- 12

அச்சிட்டு வெளியிடுபவர் & ஆசிரியர்

**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்

திருமதி. **சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்

மணவூர் **கி.விடாரண்யம்** பி.ஏ.,பி.ஜி.எல்.,
9789837069, 9962177865

**சிறப்பு ஆலோசகர்**

**கலைமாமணி டாக்டர் நடிகர் பூவிலங்கு மோகன்**

**நிர்வாக ஆசிரியர்**

**ஆர்.குணசேகரன்**

**செய்தியாளர்கள்**

**ஆர்.அரிபாபு, ஆர்.முரளி,**
**பி.வினோத்**

செய்தி இணை ஆசிரியர்கள்

கவிஞர் **சுகந்தீனா**

**துடுப்பதி ரகுநாதன்**
**பொன். சாம்பசிவம்**

இணையதள செய்தியாளர்

**எஸ்.சுருதிலட்சுமி** பி.எஸ்சி.,

சட்ட ஆலோசகர்

**வி.என்.பிரசாத்** எம்.ஏ.,பி.எல்.,

வடிவமைப்பு

**vidapublications@gmail.com**

விளம்பரம், சந்தா தொடர்புக்கு

**சி.இளவரசி**
044-23743007 / 8

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

**82485 85067**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com


## உள்ளே...





வெற்றித் தடம் பதித்த "அழகப்பா" அன்பழகன்! 7



தமிழக ஆளுநர் தனி ஆட்சி நடத்துகிறாரா? தமிழகத்தில் நடக்கும் குழப்பம்! 10



பூனைக்கு மணி கட்டப்போவது யாரு? 16




வறுமையிலிருந்து வளமைக்கு வழிகாட்டிய புத்தகம்! 23



காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை! 44



ஆன்மீகக் களஞ்சியம் திரு.சுகிசிவம்! 48



# வெள்ளிவிழா கண்ட ரயில் ஓட்டுனர் திலகவதி!

இக்காலத்தில் பெண்கள் சாதிக்காத துறை என எதுவுமே இல்லை. ராணுவத்தில் உயர் அதிகாரிகளாக, விமான ஓட்டுநர்களாக, விஞ்ஞானிகளாக ஆண்களுக்கான பணிகள் என்று நாம் நினைத்த அனைத்துப் பணிகளிலும் சேர்ந்து அசத்தி வருகிறார்கள்.

27 ஆண்டுகளுக்கு முன் இந்த நிலை இல்லை. அந்தக் காலகட்டத்தில், திலகவதி ரெயில்வேயில் புகைவண்டி ஓட்டுநராகப் பணியில் சேர்ந்து, இப்போது 27ஆண்டுகளை வெற்றிகரமாக சமீபத்தில் முடித்து வெள்ளி விழா கொண்டாடினர். தென்னிந்தியாவின் முதல் ரயில் ஓட்டுநர் தமிழகத்தைச் சேர்ந்த திலகவதி என்னும்போது நமக்கெல்லாம் பெருமிதம் அல்லவா?

"நான் சேலம் சின்னக்கவுண்டபுரம் கிராமத்தை சேர்ந்த பெண். பிறந்து வளர்ந்து படித்தது எல்லாமே அங்குதான். பள்ளிப் படிப்பு முடித்த பின், 1993 ஆம் வருடம் சேலம் பாலிடெக்னிக் கல்லூரியில் எலெட்ரிகல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் துறையில் டிப்ளமோ முடித்தேன்.

"அப்போது மத்திய ரயில்வேயில் ரயில் ஓட்டுனர் பணிக்கான விளம்பரம் பார்த்துவிட்டு அதற்கு விண்ணப்பம் செய்தேன். படிக்கும் போதிருந்தே எனக்கு நான்கு சுவர்களுக்குள் அமர்ந்து செய்யும் மேசை வேலைகளில் ஆர்வமில்லை. களத்தில் இறங்கி சாதிக்கும் பெண்ணாக மிளிர விரும்பினேன்.

"என் படிப்புக்கு உகந்த வேலையாக இப் பணி எனக்குத் தோன்றியது. எனவே விண்ணப்பித்தேன். போட்டித் தேர்வில் வெற்றி பெற்றேன். நான் உதவி ஓட்டுநர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டேன். என் கனவு நிறைவேறியது" என்று தொடங்கினார் திலகவதி.




"மகாராஷ்ட்ர மாநிலத்தில் உள்ள பூஷாவலில் உள்ள பயிற்சி நிலையத்தில், பயிற்சிக்குச் சேர்ந்தேன். ஆறு மாத கால பயிற்சி. என்னுடன் கேரளத்தில் இருந்து வந்த மற்றொரு பெண்ணும் சேர்ந்து பயிற்சி எடுத்தார். மற்றவர்கள் எல்லோரும் ஆண்கள் தாம்.

"பயிற்சியில் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டேன்.1995 ஆம் ஆண்டு பணி நியமனம் பெற்று, போபாலில் உதவி ஓட்டுநராக 4 ஆண்டுகள் பணி செய்தேன். 1999 ஆம் ஆண்டு மாற்றலில் சென்னை வந்து சேர்ந்தேன்.

"2000 ஆம் ஆண்டு சரக்கு ரயில் ஓட்டுநராக இருந்தேன். அப்போதிருந்தே தனியாக ரயிலை ஓட்டுகிறேன். 2010 முதல் சென்னை லோக்கல் மின்சார ரயில்களை ஓட்டி வருகிறேன். சென்னை சென்ட்ரல் அரக்கோணம், சென்ட்ரல் கும்மிடிப்பூண்டி, பீச் ஸ்டேஷன் வேளச்சேரி என்று பல தடங்களில் ரயிலை இயக்கி வருகிறேன்" என்று தனது பணி பற்றி கூறும் இவர்... முதன் முதலில் ரயிலில் ஏறிப் பயணம் செய்ததே இந்த பணிக்கான தேர்வுக்குச் சென்ற போதுதான்!

உடல் பலம் ஒரு புறம் என்றாலும், மனோபலம் அதிகம் தேவைப்படும் வேலை இது. எவ்விதத்திலும் கவனம் சிதறாத மனம் முக்கியம். கைகளும், கால்களும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். முதன் முதல் வண்டியை ஓட்டும் போது சிறிய பயம் இருந்தது என்று அந்த நாளை நினைவு கூர்ந்து சொல்கிறார் திலகவதி.

இப்போது எந்தவித பயமோ, தயக்கமோ இல்லை. தனியாகவே மின்சார ரயிலை இயக்கி வருகிறார். தவிர, முழு வேகத்துடன் வண்டியை இயக்கி, பின் நிலையத்தில் பத்திரமாக நிறுத்துவது என்பது பெரும் சவாலோடு கூடிய மன நிறைவைத் தரும் செயல். "அதை நான் ஒவ்வொரு முறையும் அனுபவிப்பேன்" என்கிறார் திலகவதி.

பயிற்சி காலத்தில் இருந்தே, உடன் பணி செய்பவர்கள் ஊக்கம் கொடுத்து வருவதையும், இப்போதும் தொடர்ந்து உற்சாகம் கொடுத்து வருவதையும் குறிப்பிடுகிறார். 25 ஆண்டுகளுக்கு முன் தன்னை மதிப்புடன் நடத்திய சக தோழர்களின் ஆதரவு தனக்கு என்றும் இருப்பதாக கூறுகிறார்.

அதே போல இவர் ரயிலை இயக்குவதை பார்த்து பயணிகள், மிகுந்த மகிழ்ச்சி கொண்டு பாராட்டுவதையும், ஒரு சிலர் தம் வீட்டுப் பெண்களை இந்தப் பணிக்கு அனுப்ப என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனைகளை கேட்பதாகவும், மகிழ்ச்சிகொண்டு பாராட்டுவதையும், ஒரு



சிலர் தம் வீட்டுப் பெண்களை இந்தப் பணிக்கு அனுப்ப என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனைகளை கேட்பதாகவும், மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு வழிமுறைகளை தான் சொல்லி வருவதாக பெருமிதத்தோடு சொல்கிறார் திலகவதி.

"ஒரு சமயம் நான் அரக்கோணம் நிலையம் போய் சேர்ந்தவுடன், திரும்ப எத்தனிக்கையில், ஒரு கையில கூடையுடன் வந்த வயசான கிராமத்து அம்மா, இன்னொரு கையால் என் இரு கன்னத்தையும் அழுத்தி இழுத்து, கைக்கு முத்தம் வச்சிக்கிட்டே, 'அய்யோ!, என் தங்கமா, வண்டி ஓட்டிட்டு வந்துச்சு?' அப்படின்னாங்க. நான் அன்று ஆனந்தத்தின் எல்லைக்குச் சென்றேன்" என்கிறார் பரவசத்துடன். பணி நேரங்களில் கிடைக்கும் இத்தகைய பாராட்டுக்கு ஈடு வேறு எதுவும் இல்லை.

இந்த பணி நூறு சதவீதத்துக்கும் மேல், தனக்கு நிறைவைத் தருவதாக சொல்கிறார் திலகவதி. இவருக்குப் பின் ஓட்டுநராக சேர்ந்தவர்கள், வேறு பணிகளுக்கு சென்ற போதும்... இவர் தொடர்ந்து ஓட்டுநராக இருக்கிறார். தெளிவான தொழிற்நுட்ப அறிவு, சமயோசிதம், கவனம் சிதறாத மனம், தன்னம்பிக்கையுடன் கூடிய திறமை 'செய்யும் தொழிலே தெய்வம்' என்னும் அர்ப்பணிப்பு, இவை யாவும் சேர்ந்து இவருக்கு இலாகாவில் நற்பெயரையும், பொதுமக்களிடையே பாராட்டையும் பெற்றுத் தந்துள்ளது.

இவரை பள்ளி, கல்லூரிகளில் குறிப்பாக பெண்கள் கல்லூரிகளில் சிறப்பு விருந்தினராகவும், பேச்சாளராகவும் அழைத்து கௌரவிக்கிறார்கள். 2017 பெண்கள் தினத்தில் சத்யபாமா பல்கலைக்கழகம் இவருக்கு விருது வழங்கி சிறப்பித்தது.

மார்ச் 8, பெண்கள் தினத்தன்று சென்னை சென்ட்ரலில் இருந்து திருவள்ளூர் சென்ற ரயிலை திலகவதி ஓட்டினார். அன்று மகளிர் தினத்தை சிறப்பிக்கும் விதமாக அந்த ரயிலில், டிக்கட் பரிசோதகர்,கார்டு, பணியாளர்கள் என எட்டு பேரும் பெண்களாகவே சென்று, திரும்பி 'ஒரு முழு பெண்கள் ரயிலாக' மாற்றி இயக்கினர்.

இந்த ரயிலை ஒவ்வொரு நிறுத்தத்திலும் பெண் ஊழியர்கள் வந்து வரவேற்றது, இந்த பயணத்துக்கு மேலும் சிறப்பு சேர்த்தது. அந்த மின்சார ரயிலின் பூம் ஒலியில் "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்ற பாரதியின் முழக்கம் கலந்திருந்தது.

தென்னக ரயில்வே மட்டுமன்றி, மற்ற ரயில்வே கோட்டங்களிலும், பெண்கள் ஓட்டுனராக இன்று பணி புரிகிறார்கள். மெட்ரோ ரயில் ஓட்டுகிற பெண்களும் இருக்கிறார்கள். மேற்கு ரயில்வேயில் மாதுங்கா நிலையம் பெண் ஊழியர்களே முழுமையாக நடத்தும் ரயில் நிலையம் ஆகும்.ஆனாலும் தென்னிந்தியாவில் அதுவும் தமிழச்சியாக ரயில் ஓட்டி 27 ஆண்டுகளுக்கு முன்பே சாதித்த திலகவதியை யாராலும் மறக்க முடியாது!

**– சுஜாதாமூர்த்தி!**

# வெற்றித் தடம் பதித்த "அழகப்பா" அன்பழகன்!

**நேர்காணல்: கலைமாமணி டாக்டர் நடிகர் பூவிலங்கு மோகன்**



சமீபத்தில் தொலைக்காட்சி ஒன்றில் பட்டிமன்றம் நடைபெற்றது. அதன் தலைப்பு மனிதனின் வெற்றிக்குக் காரணம் கடின உழைப்பா? கவன உழைப்பா என்பதாகும். ஆங்கிலத்தில் Hard work ,Smart work என்பதை தமிழில் குறிப்பிட்டு பட்டிமன்றம் நடைபெற்றது. பெரும்பாலானோர் தாங்கள் கடந்து வந்த பாதையில் கடினமான உழைப்பை செலுத்தியதாக சொல்வார்கள். சிலர் தாங்கள் தங்களிடம் உள்ள தொழில்நுட்பத் திறமையை பயன்படுத்தி முன்னேறியதாக சொல்வார்கள். ஆனால் நாம் சந்தித்த அழகப்பா டிராவல்ஸ் உரிமையாளர் திரு.அன்பழகன் அவர்கள் கடின உழைப்போடு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வாழ்நாள் சாதனையாளர் என்கிற விருதினை பல்வேறு தளங்களில் பல்வேறு முக்கிய பிரமுகர்களிடமிருந்து பெற்றிருக்கிறார். அவரது பாதை அவர் பதித்த தடங்கள் ஆகியவற்றை இக்கால இளைஞர்கள் பயன்படுத்தினால் முன்னேற வழி உண்டு என்பதை அவரோடு பேசியது போது நாம் உணர்ந்து கொண்டோம்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆத்தூர் கிராமத்தில் இராம அழகப்பத் தேவர் – மீனாட்சி அம்மாள் மகனாகப் பிறந்து 17 வயதில் சென்னைக்கு வந்தவர் இன்று வெள்ளிவிழா கடந்து வெற்றி தடம் பதிக்கும் அவரது வெற்றியின் ரகசியத்தை கேட்போம் வாருங்கள்.

**சென்னைக்கு எப்போ வந்தீங்க?**

5.11.1994ல் நான் சென்னைக்கு வந்தேன். சென்னையில் தி.நகரில் இயங்கிவந்த சிந்தாமணி கம்ப்யூட்டர் நிறுவனத்துல வேலை செஞ்சேன். சன் டிவி வந்த காலம் அது. சன் டிவி மாதிரியான சேனல்களுக்கு தொழில்நுட்ப கருவிகளை சப்ளை செய்து வந்தது அந்த நிறுவனம். அங்கு நான் அலுவலக உதவியாளராக வேலைக்கு சேர்ந்தேன். அந்த நிறுவனத்துலேயே இரவு நேரத்துல தங்குவதற்கும் வாய்ப்பு கிடைச்சது. அதனால அது எனக்கு ரொம்ப வசதியா போச்சு. அப்ப எனக்கு 1500 ரூபாய் சம்பளம்.




அலுவலக உதவியாளராக இருந்தபடியே ஆர்வம் இருந்ததால எடிட்டிங் கத்துகிட்டு வீடியோ எடிட்டர் ஆயிட்டேன். அப்ப மருதுபாண்டியர் என்பவர் டப்பிங் யூனியன் தலைவராக இருந்தார். அவர் மூலம் எடிட்டராக ஒர்க் பண்ண ராமாயண சீரியலில் வாய்ப்பு கொடுத்தார். அந்த சீரியலுக்கு எடிட்டரா இருந்தேன். நிறைய சீரியல்களுக்கும் விசு சாரோட அரட்டை அரங்கம் உள்பட நிறைய புரோகிராம்களுக்கும் எடிட்டிங், கிராபிக்ஸ் பண்ணி இருக்கேன்.

அமிகா டெக்னாலஜிஸ் என்கிற ஜெர்மனி நிறுவனம் தனது நிறுவனத்தின் கம்ப்யூட்டர் படிப்புகளை முடித்து அதே நிறுவன கம்ப்யூட்டர்களை அந்த நிறுவனம் குழந்தைகளின் விளையாட்டுக்காக மட்டுமே பயன்படுத்தி வந்தது. அந்த விளையாட்டு கம்ப்யூட்டர்களை முதன் முதலாக கிராபிக்ஸ் பயன்பாட்டுக்காக மாற்றி எல்லா டிவி சேனல்களுக்கும் டைட்டில் போடுவதற்கும் கிராபிக்ஸ் பயன்பாட்டுக்கும் அமிகா கம்ப்யூட்டர்களை கொடுத்தோம்.

டிவி சேனல்களில் பயன்படுத்தும் லோகோ ஜெனரேட்டர் என்கிற தொழில்நுட்ப கருவிகள் 20 லட்சம் ரூபாய் அளவுல இருந்தது. நான் அதை ஒரு லட்சம் குறைவாக வடிவமைச்சு தமிழகத்துல உள்ள அனைத்து முன்னணி சேட்டிலைட் டிவி சேனல்களுக்கும் இந்தியாவில் உள்ள அனைத்து முன்னணி சேட்டிலைட் டிவி சேனல்களுக்கும் வழங்கினேன். அதுதான் அப்ப என்னோட பெரிய சாதனையா? இருந்துச்சு.

மூணு வருசம் அந்த நிறுவனத்தில் நான் வேலை செய்யும் போது, வெளியே வந்து 1998ம் வருசத்துல Digital video system மற்றும் டிவிஎஸ் இன்ஸ்டிடியூட் மீடியா மற்றும் திரைப்பட தொழில்நுட்பம் என்கிற நிறுவனத்தை உருவாக்கினேன். என்னிடம் இருந்த கம்ப்யூட்டரை வித்ததுல 52 ஆயிரம் பணம் கிடைச்சது. அப்பாகிட்ட கொஞ்சம் பணம் வாங்கி 65 ரூபாய் அட்வான்சில் அந்த நிறுவனத்தை தொடங்கினேன். அதன் மூலமாக 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்களை உருவாக்கினேன். இங்கு உருவான தொழில் நுட்ப வல்லுநர்கள் இந்தியா முழுவதும் உள்ள சேனல்களில் பணியில் இருக்கிறார்கள். அது எனக்கு ரொம்ப பெருமையை தேடித்தந்துச்சு.





ஜெயா டிவி, எஸ்சிவி சேனல்களுக்கு முழுக்க முழுக்க தொழில்நுட்ப உபகரணங்களை சப்ளை செய்தோம். ஏவிஎம் ஸ்டுடியோவுக்குள் DVS institute of media film technology என்ற நிறுவனம் மூலம் நேரடியாக பயிற்சி கொடுத்தோம். ஒரு மாத பயிற்சி, மூன்று மாத பயிற்சி, ஒரு வருட பயிற்சி கொடுத்தோம். வீசுவல் கம்யூனிகேஷன்ஸ் படித்து வந்தாலும் இங்கு வந்து பயிற்சி பெற்று திறமைசாலிகளாக மாறினாங்க.

எமரால்டு என்கிற சினிமா தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி, சோலைமலர் எனும் மலையாள திரைப்படத்தை தமிழில் ரிலீஸ் செய்தோம். அதுக்கு பிறகு தமிழில் நிறைய படங்களை எடுக்க நினைச்சோம். அது முடியாம போச்சு. கிட்டத்தட்ட 300 திரைப்படங்களுக்கான சேனல் ரைட்ஸ் எமரால்டு நிறுவனத்தோட பெயருலதான் இருக்குது.

<u>எப்படி திடீர்னு ட்ராவல்ஸ் தொழிலுக்கு வந்தீங்க?</u>

பேருந்துகள் மீது குழந்தைப் பருவத்திலிருந்து ஒரு காதல் எனக்கு உண்டு. அந்த காதல்தான் 1.2.2004ல் அழகப்பா டிராவல்ஸ் நிறுவனத்தை தொடங்க மூல காரணமாக இருந்துச்சு. முதலில் இரண்டு பேருந்துகள் வைத்து தொடங்கினேன். இரண்டு நாலாக மாறி நாலு நாற்பது என்று வளர்ச்சியை கொடுத்தது. கல்லூரிகள், சுற்றுலாவுக்கும் பேருந்துகளை இயக்கிக்கொண்டு வருது அழகப்பா டிராவல்ஸ்.

எடிட்டிங், சினிமாவுக்கு அப்புறம் கொஞ்சம் காலம் சென்னை ரிச்சி தெருவில் கம்ப்யூட்டர் மொத்த விற்பனை கடையும் வைத்திருந்தேன். அதுக்கு பிறகு டிராவல்ஸ் தொழிலுக்கு வந்தேன். அப்ப எனக்கு இந்த தொழிலை பற்றி எதுவும் தெரியாது. டிராவல்ஸ் தொழில் மேல இருந்த காதலால வந்துட்டேன். ரெண்டு பேருந்தை வச்சு ஆரம்பிச்சு இன்றைக்கு சக்சஸ் ஆக போய்க்கிட்டிருக்கு. அதுக்கு காரணம் நான் இந்த தொழில் வச்சிருந்த, வச்சிருக்கிற காதல்தான்.

<u>18 வருஷமா ட்ராவல்ஸ்ல இருக்கீங்க. அந்த அனுபவத்தை சொல்லுங்களேன்?</u>

ஒரு நாளைக்கு ஒரு பேருந்தில் 36 பயணிகள் வருவாங்க. அவங்க பயண திட்டத்தை மாற்றாம குறித்த நேரத்துக்கு அவங்களை கொண்டு போய் சேர்க்கணும். அதுதான் இந்த தொழிலோட டார்கெட். இந்த தொழிலுக்கு முக்கிய காரணம் தொழிலாளர்கள்தான். குறிப்பாக ஓட்டுநர்கள்தான். அவுங்கதான் சரியான நேரத்துக்கு வந்து சரியான நேரத்துக்கு பேருந்துகளை இயக்கணும். தினமும் பயணம் சென்றுவிட்டு வந்து பேருந்துகளின் நிலையினை கவனிக்கணும். ஆரம்ப காலத்துல ஒரு பயணிக்காகவே பேருந்தை இயக்கி இருக்கிறோம். இன்னைக்கு ஜிபிஎஸ் ரொம்ப சாதாரணமா வந்துடுச்சு. ஆனா, 17 வருசத்துக்கு முன்னாடியே ஆம்னி பேருந்துகளில் ஜிபிஎஸ், பார் கோடிங் மூலமாக டிக்கெட் பரிசோதனையை அறிமுகப்படுத்தினேன். இந்த தொழிலுக்கு ரெட் பஸ் முக்கிய பங்களிப்பு வகிக்குது. ஆரம்பத்துல அவங்க எங்களை நம்பி இருந்தாங்க. இன்னைக்கு அவுங்க இல்லேன்னா தொழிலே இல்லை என்கிற அளவுக்கு கொண்டு போயிட்டாங்க. தொழிலாளர்களுக்கு ஊக்கம் கொடுக்கணும், ஓட்டுநர்களை சரியான நேரத்துக்கு தூங்க வச்சி பார்த்துக்கணும். இந்த தொழிலுக்கு அதுதான் ரொம்ப முக்கியமானது.

அழகப்பா டிராவல்ஸ் பயணிகளிடையே நல்ல பெயரை வாங்கியிருக்குது. ALAGAPPA HOLIDAYS நிறுவனம் மூலமாக நிறைய இண்டர்நேஷனல் டூர், டொமஸ்டிக் டூர் எல்லாம் நடத்துகிறோம்.

ஆம்னி பேருந்து தொழிலாளர்களுக்காக ஒவ்வொரு மாதமும் சங்கம் மூலமாக மெடிக்கல் கேம்ப் போடுகிறோம். ஓட்டுநர்களுக்கு இலவச கண்ணாடி கொடுத்து மருத்துவ சிகிச்சைகள் கொடுக்கிறோம். இந்த தொழில் வளர்வதற்கு காரணமாக இருக்கும் தொழிலாளர்களுக்கு எங்களாக இயன்றதை செய்கிறோம்.

<u>மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கிட்ட விருது வாங்கி இருக்கீங்களே? எப்ப எதுக்காக?</u>

2017ம் வருசத்துல அபி பஸ் நிறுவனம் மலேசியாவுல ஒரு நிகழ்ச்சி நடத்தினாங்க. அசோக்லேலண்ட் நிறுவனத்துடன்



இணைந்து வருடா வருடம் அரசு அதிகாரிகள், அமைச்சர்களை வைத்து நிகழ்ச்சி நடத்தினாங்க. அந்த வருடம் அங்குள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் கையால் விருது வாங்கினேன். அப்ப நான் ஆம்னி பேருந்துகள் சங்க பொது செயலாளராக இருந்தேன். இந்தியாவிலேயே சிறந்த சங்கமாக தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த விருது வாங்கினேன்.

2019ல் இந்தியாவில் தென்னிந்தியாவில் சிறந்த சங்கமாக தேர்வு செய்யப்பட்டு மத்திய அமைச்சர் நிதின் கட்காரி கையினால் விருது வாங்கினேன். அதே நிகழ்வில் மத்திய நிதி அமைச்சர் நிதின் கட்காரி, கேரள போக்குவரத்து அமைச்சர் சசிகுமார் மும்பையில் கொடுத்தாங்க. இந்தியாவுல இருந்து 10 ஆயிரம் பேர் வந்திருந்தாங்க. அதுல 10 பேருந்துகள் உள்ள சிறந்த டிராவல்ஸ் நிறுவனம் என்று அழகப்பா டிராவல்ஸ் நிறுவனத்திற்கும் விருதை பெற்றேன்.



**உலகம் முழுவதையும் முடக்கிப் போட்ட கொரோனா உங்களுக்கு ஏற்படுத்தின பாதிப்பை சொல்லுங்க? அந்த பாதிப்பிலிருந்து முழுமையாக வெளிவந்துட்டீங்களா?**

கொரோனா காலத்துல 4 ஆயிரம் பேருந்துகளும் ஓட முடியாம ஸ்தம்பிச்சு போச்சு. பெரிய வருவாய் தரும் இண்டஸ்ட்ரி. கொரோனாவால பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டு போச்சு. கொரோனாவுக்கு பிறகு போக்குவரத்து தொடங்கினாலும் மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு வர ரொம்பவே போராட வேண்டியதா இருந்துச்சு. வருவாய் இழப்பினால் அதை சரிகட்ட பெரும்பாடாக போச்சு. கொரோனா கால கட்டத்துல இந்த ஆம்னி பேருந்துகள் தொழிலுக்காக பல்வேறு முயற்சிகள் எடுத்து வந்தோம். அந்த காலகட்டத்தில் சிறப்பாக வேலை செஞ்சதுக்காக, இண்டர்நேஷனல் தமிழ் பல்கலைக்கழகம் சார்பாக போக்குவரத்து துறையில் சிறந்த சாதனை செய்ததற்காக டாக்டர் பட்டம் வழங்கி கவுரப்படுத்தி இருக்காங்க. இந்த விருது இன்னும் இந்த தொழிலுக்காக நிறைய செய்யணும் என்கிற ஊக்கத்தை கொடுத்திருக்குது.

**மத்திய,மாநில அரசுகள் டிராவல்ஸ் தொழிலுக்கு என்ன செய்யனும்னு எதிர்பாக்கறீங்க?**

மருத்துவத்தை எப்படி லாபகரமாக பார்க்காமல் அரசு செலவு செய்யுதோ? அதே மாதிரி பொது போக்குவரத்துக்கும் செய்யணும். மக்களும் பொதுபோக்குவரத்தை அதிகம் பயன்படுத்தணும். ஒவ்வொருத்தரும் காரில் போவதால் எரிபொருள் செலவு ஒரு பக்கம் இருக்க, சுற்றுச்சூழலும் பெரிதும் பாதிக்குது. காருல போவதை டூவீலரில் போவதை பெரும்பாலும் தவிர்த்து மக்களும் பொது போக்குவரத்தை அதிகம் பயன்படுத்தணும். அரசும் இதற்கான நடவடிக்கை எடுக்கணும். பல நாடுகளில் பொதுபோக்குவரத்துக்கு மானியமாக, இலவசமாக எரிபொருளை கொடுக்கிறாங்க. இந்தியாவில் அந்த நிலை இல்லை. இங்கேயும் அந்த நிலை வரவேண்டும்.


தனிநபர் வாகன பயன்பாட்டை குறைத்து பொதுபோக்குவரத்தை அதிகரிக்க மத்திய , மாநில அரசுகள் முயற்சி செய்யணும். இதுக்கு ஆம்னி பேருந்துகளையும் மத்திய, மாநில அரசுகள் பயன்படுத்திக்கணும். சாலைவரி, டோல்கேட் கட்டணத்தை மத்திய, மாநில குறைத்துக்கொண்டாலே பயணிகள் போக்குவரத்து கட்டணமும் கொஞ்சம் குறையும். இதை அரசுகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளணும்.

**உங்க குடும்பத்த பத்தி சொல்லுங்க? அவங்க எந்த அளவுக்கு உங்களுக்கு உதவியாக இருக்காங்க?**

என் மனைவி பொன்மலர், எனக்கு தொழிலில் பெரும் உதவியா இருக்குறாங்க. அவங்களுக்கு டூர் சம்பந்தமா அதிக ஆர்வம் இருக்குது. அதனால அந்த துறையில பெரிய உதவியா இருக்குறாங்க. என்னுடைய ALAGAPPA HOLIDAYS நிறுவனத்தின் சுற்றுலா சம்பந்தமா அவுங்க கவனிச்சிக்கிறாங்க. மகள் யாழினி 6ம் வகுப்பு படிக்கிறாள். மகன் சூர்யா 9ம் வகுப்பு படிக்கிறான். என்னோட அப்பா தமிழ்பற்று அதிகம் உள்ளவர். மலேசியாவில் இன்று எங்குபார்த்தாலும் திருக்குறள் மன்றம் பேசும்படியாக இருக்குது என்றால் அதுக்கு காரணமானவர்களில் ஒருவர் என் அப்பா ஆத்தூர் அழகப்பன். எங்க அப்பாவை திருக்குறள் அழகப்பன் என்று மலேசியாவில் கூறுவார்கள். பேரறிஞர் அண்ணா போன்றவர்களை மலேசியாவிற்கு அழைத்து வந்து நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார். தமிழுக்காக எதையாவது செய்யணும்ங்கிற அந்த ஜீன் எனக்குள்ளேயும் ஓடிக்கிட்டிருக்குது.

**இன்றைய இளைஞர்களுக்கு எதையாவது சொல்ல வருகிறீர்களா? நீங்க எந்த விதத்திலாவது அவங்களுக்கு உதவி பண்ண நினைக்கிறீங்களா?**

இப்போதிருக்கும் இளைஞர்கள் படித்துவிட்டு மாத சம்பளத்துல வேலை பார்க்கணும்னுதான் நினைக்கிறாங்க. கஷ்டப்படாம ஈஸியா இருக்கணும்னு நினைக்கிறாங்க. ஒரு கம்பெனியில் வேலை பார்த்தாலும் சொந்தமாக நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணம் வரணும். உலகம் முழுவதும் பெரிய பெரிய கம்பெனிகள் உருவாகுறதுக்கு நம்ம ஆட்கள்தான் காரணமா இருக்குறாங்க. ஒரு கிராமத்துல இருந்து பெரிய பண பலத்தோட வராம வந்த நானே இன்னைக்கு இந்த அளவுக்கு வளந்திருக்கேன். அதனால எல்லோரும் மாத சம்பளத்துல வேலை பார்க்குற எண்ணத்துல இருந்து மாறி, நாம பெரிய நிறுவனங்களை உருவாக்கி நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கணும்ங்கிற எண்ணம் வேணும். தன்னம்பிக்கையோடு களமிறங்கணும். முடியும்னு நினைச்சா கண்டிப்பா சாதிக்க முடியும்.



# தமிழக ஆளுநர் தனி ஆட்சி நடத்துகிறாரா?

## - தமிழகத்தில் நடக்கும் குழப்பம்!



**தி.**மு.க.ஆட்சிக்கு வந்த சில மாதங்களில் தமிழகத்தின் கவர்னராக மேதகு ஆர்.என்.ரவி அவர்கள் நியமனம் செய்யப்பட்ட போது பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. ‘‘தமிழக ஆளுநராக ஆர்.என்.ரவி நியமிக்கப்பட்டதில் உள்நோக்கம் இருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இடையூறு செய்வதற்காகவே இது போன்ற நியமனங்களை மத்திய அரசு கடந்த காலங்களில் செய்திருக்கிறது. புதுச்சேரியில் கிரண் பேடியை ஆளுநராக நியமித்து, அம்மாநில அரசுக்கு எதிராக நடத்திய ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நாடே பார்த்தது. அதுபோல, தமிழகத்தில் ஸ்டாலின் அரசுக்கு இடையூறு செய்ய இந்த நியமனம் செய்யப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்” என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி அப்போது டிவிட்டரில் பதிவிட்டார். அவர் சொன்னது சரி தானோ என்பது போல தொடர்ந்து தமிழகத்தில் கவர்னரின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது எண்ணத் தோன்றுகிறது.

பொதுவாக மத்தியில் ஆளும் பாஜக அரசு தனக்கு எதிராக ஆளும் மாநிலங்களில் கவர்னரை நியமனம் செய்து ஆளும் கட்சிக்கு குடைச்சல் கொடுப்பது என்பது வாடிக்கையான ஒன்று. மேற்குவங்கத்தில் மம்தா பானர்ஜி ஆட்சிக்கு இப்படித்தான் இடையூறு செய்து வருகிறார்கள்.

தி.மு.க தலைமையிலான தமிழக அரசுக்கும், தமிழக

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும் இடையே மோதல் போக்கு தீவிரமடைந்துள்ளது. நீட் தேர்வில் தமிழகத்துக்கு விலக்கு கோரும் மசோதா உட்பட சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பல மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் ஆளுநரே வைத்திருக்கிறார். அதையடுத்து, இரு தரப்பினருக்கும் இடையே மோதல் போக்கு தீவிரமடைந்து வருகிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஆளுநர் மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார் என்ற தகவலை சமீபத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

நீட் மசோதாவில் ஆளுநர் காலம் தாழ்த்திவந்த நிலையில், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை அரசே நியமிக்கும் வகையில் சட்ட மசோதா விரைவில் கொண்டுவரப்படும் என்று கடந்த ஜனவரி மாதம் சட்டமன்றத்தில் அதிரடியாக அறிவித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அதன் பிறகு, மாநில அரசுக்கும் ஆளுநருக்கும் இடையே பல விவகாரங்களில் மோதல் வெடித்தது. சமீபத்தில் ஆளுநர் அளித்த தேநீர் விருந்தை தி.மு.கவும், அதன் கூட்டணிக் கட்சிகளும் புறக்கணித்தன. உதகையில் துணைவேந்தர்கள் மாநாட்டை ஆளுநர் ஆர்.என்.ரவி தொடங்கிவைத்தார்.

துணைவேந்தர்கள் மாநாட்டுக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்து, தி.மு.கவின் கூட்டணிக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

“அரசியலமைப்பு அதிகாரத்தைப் பெற்றுள்ள ஆளுநர், மாநில சட்டமன்றம் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையை ஏற்றுச் செயல்படவேண்டிய கடமைப் பொறுப்பில் உள்ளவர். மக்களாட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரித்தும், தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுக்கு எதிராகவும் செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடவடிக்கை, அரசியலமைப்புச் சட்ட அத்துமீறலாகும். மேலும், மக்கள் பிரதிநிதி ஆட்சி முறைக்கு எதிரான, போட்டி அரசை நடத்தும் அதிகபட்ச அத்துமீறலாகும்.

தமிழ்நாட்டில் ஓர் அசாதாரண சூழலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆளுநர் செயல்படுகிறார். அரசியலமைப்புச் சட்டம் மாநில அரசுக்கும், மக்களாட்சிக்கும் வழங்கியுள்ள சட்ட உரிமைகளுக்கு எதிராக ஆளுநர் கூட்டியுள்ள பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டை ரத்துசெய்ய வேண்டும். இந்த மாநாட்டை துணைவேந்தர்களும், பேராசிரியர்களும் புறக்கணிக்க வேண்டும்” என்று முத்தரசன் கூறியிருந்தார்.

நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் தர ஆளுநர் கால நிர்ணயம் சொல்ல மறுத்தது பற்றி முரசொலி நாளிதழ் விமர்சனம் செய்துள்ளது .




இது குறித்து திமுகவின் அதிகாரப்பூர்வ நாளேடான முரசொலியில் வெளியாகியுள்ள விமர்சனத்தில், " தனக்கு இருக்கும் கடமையை செய்யாமல் தமிழ்நாடு ஆளுநர் என்.ஆர்.ரவி அவசியமற்ற அரசியல் செய்துகொண்டிருக்கிறார். ஒருவேளை தமிழ்நாடு பாஜகவின் தலைமைப் பொறுப்பை தானே கவனிக்கலாம் என ஆளுநர் நினைக்கிறாரா?

தன்னை அவர் ஜனாதிபதியாக நினைத்துக்கொள்கிறார் போலும். சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவை குடியரசு தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டியது அவரது வேலையே தவிர, ஊறுகாய் பானையில் ஊற வைப்பது அவரது வேலை இல்லை.

பாஜகவுக்கு தமிழ்நாட்டில் இருக்கும் ஒன்றையணா ஒட்டுக்கும் உலைவைக்க ஆளுநர் ரவி முடிவு எடுத்துவிட்டாரா? யாரோ சிலரால் ஆளுநர் தவறாக நடத்தப்படுகிறார் என்பது மட்டும் தெளிவாக தெரிகிறது. தாமதிக்கப்படும் நீதி என்பது மறுக்கப்பட்ட நீதியாகும், அதைப் புரிந்தும் தெரிந்தும் தெளிந்தும் செயல்பட வேண்டும்" என கட்டுரை வெளிவந்தது.

மொத்தத்தில் கவர்னர் தமிழகத்தை ஆளுங்கட்சிக்கு எந்தெந்த விதத்தில் தொந்தரவு கொடுக்கலாம் என்பதில் கவனமாக இருக்கிறார் என்று பல்வேறு கட்சி தலைவர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள்.

எது எப்படியாயினும் அரசுக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்த மோதல் போக்கினால் அதிகாரிகள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டு நிர்வாகத்தில் சிக்கல் ஏற்படுகிறது. எனவே மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு தீர்வு காண வேண்டும். பொதுமக்கள் நலன் கருதி அவர்கள் அதைச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

**கி.விடாரண்யம்,**

செய்தி ஆசிரியர்

# குற்றஞ்சாட்டுவதால் பெட்ரோல் விலை குறையுமா?

பெட்ரோல் விலை நிர்ணயத்தை எண்ணெய் நிறுவனங்களே தீர்மானிக்கின்றன என்றுதான் இதுவரை ஆட்சியாளர்கள் சொல்லி வந்தார்கள். அது மத்தியில் ஆளும் பா.ஜ.க.வாக இருந்தாலும் ஏற்கனவே ஆண்ட காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் இந்த காரணத்தைத் தான் இதுவரை சொல்லி வந்தார்கள்.

ஆனால் கடந்த வாரம் பிரதமர் மோடி அவர்கள் காணொளி வாயிலாக மாநில முதல்வர்களிடம் பேசியபோது மாநில அரசுகள் வரியை குறைத்தால் பெட்ரோல் டீசல் விலை குறையும் என்று குறிப்பிட்டு அப்படி செய்யவேண்டிய சில மாநிலங்களின் பெயரையும் அப்போது அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் கொரோனா தொற்று அதிகரித்து வருவது தொடர்பாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 27ஆம் தேதி மாநில முதல்வர்களுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது பெட்ரோல் விலை குறித்து அவர் பேசினார்.

"பெட்ரோல், டீசல் விலை உயர்வுச் சுமையைக் குறைப்பதற்காக கடந்த நவம்பர் மாதம் மத்திய அரசு அவற்றுக்கான உற்பத்தி வரியைக் குறைத்தது. அதேபோல மாநிலங்களும் உள்ளூர் வரியை குறைக்க வேண்டுமென மத்திய அரசு கேட்டுக்கொண்டது. சில மாநிலங்கள் வரியைக் குறைத்தன. ஆனால், பல மாநிலங்கள் மக்களுக்கு எந்தப் பலனையும் வழங்கவில்லை. இதன் காரணமாக,



அந்த மாநிலங்களில் பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து அதிகமாக உள்ளது. இது இந்த மாநிலங்களின் மக்களுக்குச் செய்கிற அநீதி. மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், தெலங்கானா, ஆந்திரா, கேரளா, ஜார்கண்ட், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் மத்திய அரசு சொன்னதைக் கேட்கவில்லை. எனவே அந்த மாநிலங்களின் மக்கள் தொடர்ந்து சுமையை அதிகரித்து வருகின்றனர்.


வரியைக் குறைத்திருக்காவிட்டால் கர்நாடக மாநிலம் 5,000 கோடி ரூபாயையும் குஜராத் 3,500 கோடி ரூபாயையும் சம்பாதித்திருக்க முடியும். எனவே கடந்த நவம்பர் மாதம் செய்திருக்க வேண்டியதை இப்போது நீங்கள் செய்து, மதிப்புக் கூட்டு வரியைக் குறைத்து மக்களுக்கு அந்தப் பலனை வழங்கி ஒத்துழைக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

பிரதமரின் இந்த குற்றச்சாட்டுக்கு அந்தந்த மாநில முதல்வர்கள் பதிலளித்துள்ளார்கள்.

மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி , "பிரதமருடனான இன்றைய கலந்துரையாடல் ஒரு பக்கச் சார்புடனும் தவறான தகவல்களைத் தருவதாகவும் இருந்தது. நாங்கள் ஒவ்வொரு லிட்டர் பெட்ரோலுக்கும் ஒரு ரூபாய் மானியத்தை கடந்த மூன்று ஆண்டுகளாகத் தந்து வருகிறோம். கோவிட் 19 நிலவரம் குறித்த கூட்டத்தில் பிரதமர் எரிபொருள் விலையைப் பற்றி பேசியிருக்க வேண்டியதில்லை" என்று தெரிவித்தார்.

தெலங்கானா முதல்வர் கே. சந்திரசேகர ராவ், "மாநிலங்களிடம் வரியைக் குறைக்கச் சொல்லிக் கேட்பதற்குப் பதிலாக, மத்திய அரசே ஏன் வரியைக் குறைக்கக்கூடாது? தெலங்கானா அரசு கடைசியாக 2015இல் எரிபொருள் விலையை உயர்த்தியது. அதற்குப் பிறகு விலையை உயர்த்தவில்லை. மத்திய அரசு வரிகளை மட்டுமல்லாமல், 'செஸ்'ஐயும் உயர்த்தியது. உங்களுக்குத் தைரியமிருந்தால் வரிகளை உயர்த்தியது ஏன் என்பதை விளக்குங்கள்" என்று கூறினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், "2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததிலிருந்து, கச்சா எண்ணெய்யின் விலை பெருமளவு சரிந்தபோதும் அதற்கேற்றாற்போல பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்காமல், அந்த



எண்ணெய் விலை வீழ்ச்சியால் கிடைத்த உபரி வருவாய் முழுமையும் தனதாக்கிக் கொண்டது மத்திய அரசு. பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்படக்கூடிய தலவரியையும் தலமேல்வரியையும், மாநில அரசுகளோடு பகிர்ந்தளிக்கத் தேவையில்லை என்பதால் இந்த வரிகளை மிகக் கடுமையாக உயர்த்தி, அதனால் கிடைக்கும் லட்சக்கணக்கான கோடி வருவாயை முழுவதும் தனதாக்கிக் கொண்டது மத்திய அரசு.





சில மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது என்ற காரணத்திற்காக இந்தத் தேர்தலுக்கு முன்பாக அதிரடியாக பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்படும் வரிகளைக் குறைத்து வேடம் போட்டது மத்திய அரசு. தேர்தல்கள் முடிந்த பின்பு, அடுத்த வாரமே மடமடவென விலையை முன்பு இருந்ததை விட உயர்த்தி, மக்கள் மீது கூடுதல் சுமையை சுமத்தியிருக்கிறது மத்திய அரசு.

இவை அனைத்தும் தமிழக மக்களுக்கு நன்றாகவே தெரியும். யார் பெட்ரோல் விலையைக் குறைப்பதில் உண்மையிலேயே முனைப்பு காட்டுகிறார்கள்; யார் பெட்ரோல் விலையைக் குறைப்பது போல நடித்து, பழியை மற்றவர்கள் மீது போடுகிறார்கள் என்பதை மக்களுடைய முடிவிற்கே நான் விட்டு விடுகிறேன்" என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு தரும் தகவல்களின் அடிப்படையில் ஏப்ரல் 26ஆம் தேதி நிலவரப்படி, ஒரு லிட்டர் பெட்ரோலின் அடிப்படை விலை ரூ. 56.70. கலால் வரி, செஸ் உட்பட மத்திய அரசு வசூலிக்கும் வரி ரூ. 27.90. மாநில அரசின் மதிப்புக் கூட்டு வரி ரூ. 22.54. போக்குவரத்து செலவு லிட்டருக்கு ரூ. 0.15. டீலருக்கான கமிஷன் ரூ. 3.56. முடிவில், சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை ரூ. 110.85. 2014ல் ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை ரூ. 75.74.

டீசலைப் பொறுத்தவரை ஒரு லிட்டர் டீசலின் அடிப்படை விலை ரூ. 58.29. கலால் வரி, செஸ் உட்பட மத்திய அரசு வசூலிக்கும் வரி ரூ. 21.80. மாநில அரசின் மதிப்புக் கூட்டு வரி ரூ. 18.45. போக்குவரத்து செலவு லிட்டருக்கு ரூ. 0.15. டீலருக்கான கமிஷன் ரூ. 2.25. முடிவில், சென்னையில் ஒரு லிட்டர் டீசலின் விலை ரூ. 100.94. 2014ல் ஒரு லிட்டர் டீசலின் விலை ரூ. 62.27.



தமிழ்நாடு நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனைப் பொறுத்தவரை, எரிபொருள் மீதான வரியைக் குறைப்பது இயலாத காரியம் என்கிறார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், ஜிஎஸ்டி அமலாக்கப்பட்ட பிறகு, மாநில அரசின் வரி திரட்டும் அதிகாரம் வெகுவாகக் குறைந்துவிட்டதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மேலும் கோவிட் 19 பரவலால் வரி வருவாய் பாதிக்கப்பட்டிருப்பதோடு, செலவுகள் அதிகரித்திருப்பதாகவும் கூறியுள்ள நிதியமைச்சர், மத்திய அரசுதான் செஸ் மற்றும் சர்சார்ஜ்களைக் குறைத்து, பெட்ரோலில் இருந்து மத்திய அரசு வசூலிக்கும் வரியிலிருந்து மாநிலங்களுக்கு உரிய பங்கைத் தர வேண்டும் என தெரிவித்திருக்கிறார்.

மத்திய அரசு அதிக வரியை விதித்துவிட்டு, மாநில அரசுகளை வரியைக் குறைக்கச் சொல்லக்கூடாது என்றும் செஸ் மற்றும் சர்சார்ஜை 2014ஆம் ஆண்டில் இருந்த நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜனைப் பொறுத்தவரை, கடந்த ஆகஸ்ட் மாதம் பெட்ரோல் மீதான வரியை 3 ரூபாய் குறைத்ததன் மூலம் வருடத்திற்கு ரூ. 1,160 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மத்திய அரசைப் பொறுத்தவரை, 2019 – 20ல் பெட்ரோல் டீசல் மீது விதிக்கப்பட்ட வரியால் ரூ. 2,39,452 கோடி கிடைத்தது. ஆனால், 20 – 21ல் இந்த வருவாய் ரூ. 3,89,622 கோடியாக உயர்ந்திருக்கிறது.

ஆனால், இந்த வருவாயிலிருந்து தமிழ்நாடு அரசுக்கு 2019 – 20ல் 1,163.13 கோடி ரூபாய் கிடைத்த நிலையில், 2021 அந்தத் தொகை 837.75 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது.

கடந்த நவம்பர் 11ஆம் தேதி மத்திய அரசு பெட்ரோல் மீதான வரியை 5 ரூபாயும் டீசல் மீதான வரியை பத்து ரூபாயும் குறைத்தது. இதனால், மாநில அரசுக்குக் கிடைக்கும் வரி வருவாயும் 1,050 கோடி ரூபாய் அளவுக்குக் குறைந்தது. ஆகவே, இந்தச் சூழலில் மாநில அரசு தனது வரியைக் குறைக்க முடியாது என்கிறார் தமிழ்நாடு நிதியமைச்சர்.



பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் போட செல்லும் வாகன ஓட்டிகள் இந்த குற்றச்சாட்டுகளை கேட்கும்போது இவற்றால் பெட்ரோல் விலை குறையுமா என்று கேலியாக கேட்கிறார்கள்.

**– வைத்தியநாதன்**

மாதம் ஒரு திருத்தலம்

# திருவரங்கத்தை நெஞ்சில் நிறுத்தும் கூரத்தாழ்வார் பூமிக் கோயில்!

- எம்.எஸ். மூர்த்தி

காஞ்சிபுரம் அருகே கூரம் நகரில் ஸ்ரீமத் லட்சுமி நாராயணர் திருக்கோயிலின் சிறப்பை கேள்விப்பட்ட நான் எனது குடும்பத்தினருடன் அந்தக் கோவிலுக்கு சென்றேன் வரும் 25ஆம் தேதி அந்தக் கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதாக தெரியவந்தது . இத்திருக்கோயிலுக்கு கொடி மரம் அமைத்துத் தரும் பணியை இறைவன் நமக்கு அளித்தார். எனது குடும்பத்தினருடன் அந்தக் கோயிலுக்குச் சென்று கொடிமரம் அமைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டோம்.





இந்தக் கோயில் காஞ்சிபுரத்திலிருந்து அரக்கோணம் வழியாக திருப்பதி செல்லும் சாலையில் அமைந்துள்ளது என்ற செய்தியே பெருமாளின் கருணையை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

வைணவப் பெரியவர் ஸ்ரீ ராமானுஜர் அவர்களின் சீடர் ஸ்ரீ கூரத்தாழ்வார் இந்த மண்ணில் பிறந்தார். தனது சீடரை பார்க்க அடிக்கடி ஸ்ரீராமானுஜர் இங்கு வந்து சென்றதாக இங்குள்ள ஆன்மீக அன்பர்கள் நமக்கு தெரிவிக்கிறார்கள். கூரத்தாழ்வாருக்கு ஏராளமான செல்வங்கள் அமைந்திருந்தும் அந்த செல்வங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் அந்த செல்வங்களை பயன்படுத்தி ஏழை எளிய மக்களுக்கு தினந்தோறும் தவறாமல் அன்னதானம் செய்து கொண்டிருக்கிறார் .அன்னதானம் சில நேரங்களில் இரவு வரை கூட தொடர்ந்திருக்கிறது. அப்படி ஒருநாள் அன்னதானம் நிறைவுற்று கதவுகள் சாத்தப்படும் போது எழுந்த ஓசை காஞ்சியில் இருந்த வரதராஜ பெருமாள் கோவிலில் ஒலித்ததாம். அந்த ஓசையை கேட்க பெருந்தகை பெருந்தேவித் தாயார் அதுபற்றி திருக்கச்சி நம்பிகளிடம் கேட்டிருக்கிறார். திருக்கச்சி நம்பிகள் அது கூரத்தாழ்வாரின் மாளிகை கதவில் இருந்து எழுந்த ஓசை என்று சொல்லி இருக்கிறார். "அப்படியா கூரத்தாழ்வார் அவ்வளவு செல்வந்தரா" என்று ஆச்சரியத்தில் கேட்டிருக்கிறார்.



மறுநாள் இந்த செய்தி கூரத்தாழ்வார் செவிகளில் விழுந்தது. உடனே கூரத்தாழ்வார் தன்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் அப்படியே மக்களிடம் விட்டுவிட்டு ராமானுஜரின் அழைப்பை ஏற்று கட்டிய உடையோடு ஸ்ரீரங்கம் சென்று அரங்கமானய்யனுக்கு சேவை செய்து வந்தார்."

கூரத்தாழ்வார் பிறந்த மண்ணில் வரும் 25ஆம் தேதி ஸ்ரீமத் லட்சுமி நாராயணர் திருக்கோயில் அஷ்டபந்தன மகா சம்ப்ரோக்ஷணம் மூன்று நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற உள்ளது. இதுபற்றி கும்பாபிஷேக பணிகளில் இரவு பகல் பாராமல் பசி தூக்கம் இல்லாமல் உழைத்து வரும் ஸ்ரீமத் ராமானுஜ தாசர் ஸ்ரீமந் லட்சுமி நாராயணன் அறக்கட்டளை தலைவர் திரு வி.ஜி. ரங்கசாமி அவர்களிடம் பேசினோம்."2018ம் ஆண்டில் எம்பெருமான் கனவில் இங்கு கோயில் எழுப்ப உத்தரவிட்டார். அதன்படி ஸ்ரீரங்கத்தில் உள்ள கோயிலைப் போலவே இங்கும் பெருமாளுக்கு ஒரு கோயில் எழுப்ப வேண்டும் என்று கடவுள் உத்தரவிட்டதால் திருவல்லிக்கேணியை சேர்ந்த ஆண்டாள் பக்தி இயக்க தலைவர் திருமதி கிருஷ்ணவேணி கண்ணன் அவர்களும் சென்னை அசோக் நகரில் வசித்து வரும் லிப்ரா நிறுவன இயக்குனர் திரு ரவீந்தர் சந்திரசேகர் அவர்களும் திருமதி வனிதா ,திரு.சந்திரசேகர் ஆகியோர் ஒருங்கிணைந்து இப் பணியை செய்து வருகிறார்கள்.அவர்களின் சீரிய முயற்சியால் ஸ்ரீமத் லட்சுமி நாராயணன், ஸ்ரீ ஆதிலட்சுமி, ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ சக்ரத்தாழ்வார் ஆகியோருக்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டுள்ளது. கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற உள்ளது."என்று தெரிவித்தார்.



தொடர்புக்கு:திரு.வி.ஜி.ரங்கசாமி :7305671599

# ஆன்மீகத் தகவல்கள்

ஆயுள் பலம் பெறுவதற்கும் மரண பயம் இன்றி வாழ்வதற்கும் வழிபட வேண்டிய பரிகார ஸ்தலங்கள், நவக்கிரகங்கள் இல்லாத பிரசித்தி பெற்ற புராதன சிவன் கோயில்கள் உள்ளன. எங்கெல்லாம் எமன் சிவனை வழிபட்டுள்ளாரோ அங்கெல்லாம் நவகிரகங்கள் இருக்காது.

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் நவகிரகம் இல்லை .ஏனென்றால் அங்கு எமன் வந்து வழிபட்ட தலம்.

திருநள்ளாறு தர்ப்பாரண்யேஸ்வரர் கோயிலிலும் நவகிரக சந்நதி இல்லை. அங்கும் எமன் வந்து வழிபட்டதாக கூறப்படுகிறது.

ஸ்ரீவாஞ்சியம் அங்கு எமனுக்கு முக்கியத்துவம். இங்கு எமன் சிவனை வழிபட்டதாக ஐதீகம்.

நான்காவது ஸ்தலம் திருவாவடுதுறை. இங்கு எமன் சிவனை வழிபட்டதாக வரலாறுகள் உள்ளன.

திருப்பைஞ்சீலி வாழை மரத்தை தலவிருட்சமாகக் கொண்ட சிவஸ்தலம். திருச்சிக்கு அருகில் உள்ள இந்த தலத்திலும் நவகிரகங்கள் கிடையாது.

திருக்கடையூரில் மானிடர்களின் உயிரை பறித்த எமனுக்கு சிவன் இங்கு மறுபடியும் உயிரை எடுக்கும் அதிகாரம் வழங்கிதாக ஐதீகம்.



காளஹஸ்தி ஸ்தலம். பஞ்சபூத தலங்களில் இது வாயு ஸ்தலம். அங்கு ஒன்பது படிகள் கொண்ட தங்கஏணியில் (golden ladder) ஒவ்வொன்றிலும் மூன்று மலர்கள் பொறிக்கப்பட்டிருக்கும. இந்த 3*9 என்பது 27 நட்சத்திரத்தை குறிக்கும். 27 நட்சத்திரங்களும் இந்த ஏணியில் ஆவாகனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஏணி சிவலிங்கத்தின்மீது சாய்த்து வைக்கப்பட்டிருக்கும். அதை தீபாராதனை காட்டும் போது மட்டும் தான் பார்க்க முடியும்.

திருமழப்பாடி. திருவையாறுக்கு அருகில் உள்ளது. அங்கும் நவகிரக சந்நிதி இல்லை.

திருக்கடையூர். இதன் தலபுராணம் வித்தியாசமானது. எமன் மார்க்கண்டேயனை நோக்கி பாசக்கயிறு வீசும் போது சிவன் காட்சி அளித்து என்னுடைய பக்தனை எப்படி நீ ஆட்கொள்ளலாம் என்று காலால் எட்டி உதைத்ததாகவும் அதனால் இறத்தல் தொழில் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் இந்த ஸ்தல புராணம் கூறுகிறது.

அடுத்த ஸ்தலம் திருமழப்பாடி திருவையாறு அருகில் இருக்கிறது.

அடுத்த ஸ்தலம் திருவெண்காடு. இங்கிருக்கும் நடராஜர் சிதம்பரத்தை விட பழமையானவர்.

அடுத்து திருப்புறம்பியம் – ஸ்தலம். இங்கும் நவக்கிரகம் கிடையாது.

இதைத்தவிர இன்னும் நவகிரகங்கள் இல்லாத புகழ்பெற்ற பல சிவ ஆலயங்கள் உள்ளன.

*திருவேள்விக்குடி ஈசனுக்கும் அன்னை பார்வதிக்கும் திருமண வேள்வி நடந்த தலம் ஆதலால் நவக்கிரகங்கள் இல்லை அதற்கு பதிலாக நவகிரஹ ஈசானிய மூலையில் உள்ள மேடையில் 48 அகல் விளக்குகள் ஏற்றி வழிபட்டால் அனைத்து தோஷங்களும் நீங்கி விடும். தீர்க்காயுள் கிடைக்கும்.



*- நாராயணசாமி*



## இணையத்தில் பரவும் மாணவர்களின் ஒழுங்கீனம்:

# பூனைக்கு மணி கட்டப்போவது யாரு?

**ச**மீபகாலமாக இணையதளங்களில் மாணவர்கள் தங்கள் தகுதிக்கு மீறி நடத்தி வரும் சம்பவங்களைப் பார்க்கும்போது அனைவரது மனதிலும் உடனடியாக பதட்டம் ஏற்படுகிறது.

நம் வீட்டுப் பிள்ளை யாராவது இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு விடுவார்களோ என்கிற பயம் உடனடியாக தோன்றுகிறது.

பள்ளிக்கூடங்கள் போகும் பாதை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. இதை ஆசிரியர்கள் மட்டும் சரி செய்ய இயலாது. சரி செய்ய முயற்சித்த ஒரு சில ஆசிரியர்களின் நிலைமை என்ன ஆனது என அனைவருக்கும் தெரியும்.

அரசும் பெற்றோர்களும் அரசும் சமுதாயமும் சேர்ந்து பிள்ளைகளை நல்வழிப்படுத்த வேண்டும். செல்போனை 18 வயதுக்கு மேல் தான் பயன்படுத்த வேண்டும் என சட்டம் இயற்றப்பட வேண்டும். இல்லையெனில் நிலைமை மிகவும் மோசமாகி விடும்.

சமீப காலமாக அரசுப் பள்ளிகளில் சில மாணவர்கள், பள்ளி வளாகத்திலும், வகுப்பறைகளிலும் ஆசிரியர்களிடமும் நடந்து கொள்ளும் விதம் மிகுந்த கவலைக்கு உரியது. ஆசிரியர்களை மாணவர்கள் இழிவாகப் பேசுகின்ற, தாக்க முனைகின்ற வீடியோக்கள் ஊடகங்களில் சுற்றுகின்றன. அவை பெரும்பாலும் மாணவர்களால் எடுக்கப் பட்டு அவர்களாலேயே இன்ஸ்டாகிராம் போன்ற பக்கங்களில் பகிரப் படுகின்றன.

மேலும் பாடம் நடத்தும் போது பெண் ஆசிரியர்களை வீடியோ எடுத்து சமூக வலைத் தளங்களில் பதிவிடுகிறார்கள். உண்மையில் இவை போன்ற நிகழ்வுகள் தினம் தினம் பள்ளிகளில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.அவை வெளியே தெரிவதில்லை. ஆசிரியர்கள் மென்மையாக அறிவுரை கூறி கடக்க வேண்டிய நிர்பந்தம். பெண் ஆசிரியர்கள் எப்போதும் ஒரு அச்ச உணர்வுடனோ ஜாக்கிரதை உணர்வுடனோ பாடம் நடத்த வேண்டியிருக்கிறது. அது எப்படிப்பட்ட மன உளைச்சலுக்கும் மன அழுத்தத்திற்கும் பெண் ஆசிரியர்களை உள்ளாக்குகிறது?

இந்த சம்பவங்கள் தொடர்பாக நமக்குள் எழுகின்ற சந்தேகங்கள் தீர்க்கப்படும் போதுதான் இதற்கான தீர்வு கிடைக்கும்.

கொரோனா காலச் சூழல் தான் காரணம் என்றால் தனியார் பள்ளிகளில் பெரும்பாலும் இவை போன்ற நிகழ்வுகள் நடக்கின்றனவா?. நடந்தால் அவை ஏன் வெளியே தெரிவதில்லை?.

கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் காரணம் என்றால் அவற்றைத் தடுப்பதற்காக மிகத் தீவிரமாக அரசு நடவடிக்கை தடுப்பதற்காக மிகத் தீவிரமாக அரசு நடவடிக்கை எடுக்கிறதா?

மாணவர்களிடம் அன்பாகச் சொல்ல வேண்டும், உரையாட வேண்டும் என்று சொல்லும் சமூகத்தின் அறிவுரைகளைப் ஆசிரியர்கள் பின்பற்றிக் கொண்டிருப்பதற்குப் பின்பும் இப்படி நடந்து கொள்ளும் மாணவர்களை என்ன செய்வது ?.

ஒவ்வொரு பள்ளியிலும் மனநல ஆலோசகர்கள் நியமிக்கப்பட வேண்டும் என ஆசிரியர்களும் கல்வியாளர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசு ஏன் இதில் ஆர்வம் காட்டுவதில்லை?.

வன்முறையில் ஈடுபடும் மாணவர்களை ஆசிரியர்கள் தான் இரண்டாம் தாயாக இருந்து திருத்த வேண்டும் என்று கல்வி அமைச்சர் இன்று தெரிவித்திருக்கிறார். இது நடைமுறையில் சாத்தியமா?.

மாணவர்களின் ஒழுங்கீனச் செயல்களுக்குப் பெற்றோர், சமூகம், அரசு போன்றவற்றின் கூட்டுப் பொறுப்பினைப் புறந்தள்ளி, எல்லாவற்றிற்கும் ஆசிரியர்களைப் பொறுப்பாக்குவது சரி தானா?.

பள்ளிக்கு ஏன் வரவில்லை, ஏன் படிக்கவில்லை, ஏன் சீருடை அணியவில்லை, ஏன் முடிவெட்டவில்லை, ஏன் எழுதவில்லை, ஏன் ரெகார்ட் நோட்டு வைக்கவில்லை, ஏன் தாமதமாக வருகிறாய் என எதையும் மாணவர்களிடம் கேட்காமல், நூறு சதவீத தேர்ச்சியைத் தந்தே ஆக வேண்டும், நூறு சதவீதம் மாணவர்களின் வருகை இருந்தே ஆக வேண்டும் என்று ஆசிரியர்களை கடுமையாக வருத்துவது எதனால்?.

வகுப்பறையில் ஆசிரியர்களிடமோ, ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது ஒழுங்கீனமான செயல்களின் ஈடுபடும் மாணவர்களால் அந்த வகுப்பில் உள்ள மற்றமற்ற

# மாணவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் இல்லை!

அரசுப் பள்ளி ஆசிரியை சு.உமாமகேஸ்வரி



தமிழ்நாட்டுல 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு ஸ்கூல்கள் இருக்கு; லட்சக்கணக்கான குழந்தைங்க படிக்கிறாங்க. இதுல ஒரு நான்கைந்து வீடியோதான் வந்திருக்கு. ஆனா, அதையே பெரிசுபடுத்தி, வைரலாக்கி, அரசுப் பள்ளிகளே சரியில்லைங்கற மாதிரி கொண்டு வந்து இன்னைக்கு நிறுத்தியிருக்காங்க. இதை எல்லாம் செய்றவங்க யாருன்னு பாத்தீங்கன்னாஞ் பெரும்பான்மையானவங்க அரசுப் பள்ளிகளுடன் தொடர்பில்லாத மேல்தட்டு மக்கள், செலிபிரட்டிகள்தான். இவங்க யாரும் அரசுப் பள்ளிகள் பக்கம் வருவதே கிடையாது.

கடந்த ரெண்டு ஆண்டுகளா அரசுப் பள்ளிகள் தொடர்பா பாசிட்டிவான அபிப்ராயங்கள் வந்தது. இதுவும் கொரோனா காரணமா ஏற்பட்ட பொருளாதார இழப்பும் சேர்ந்து அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை அதிகரிச்சது. கிட்டத்தட்ட 6 லட்சம் குழந்தைகள் இந்த இரண்டாண்டு காலத்தில் வந்திருக்காங்க. இன்னொரு பக்கம் நிறைய தனியார் பள்ளிகள்ல அட்மிஷன் குறைஞ்சிருக்கு.

இந்நிலையில, அடுத்த கல்வியாண்டுக்கான மாணவர்கள் சேர்க்கை விரைவில தொடங்க இருக்கு. இந்த சூழ்நிலையில இந்த வீடியோக்கள் இப்படி பரப்பப்படுவது என்ன செய்யும்? இந்த வீடியோக்களை பார்க்கிறவங்க, கொஞ்சம் வருமானத்துக்கான வாய்ப்பும் இருந்தா, மீண்டும் தனியார் பள்ளியிலயே குழந்தையை கொண்டு போட்டுவிடலாம் என்றுதான் முடிவெடுப்பாங்க.

சரி, அரசுப் பள்ளி மாணவர்கள் மட்டும்தான் இப்படி இருக்காங்களா? தனியார் பள்ளி மாணவர்கள் குறும்பே செய்யமாட்டங்களா? அவங்களும் குழந்தைங்கதானேஞ்

மேலும், மாணவர்கள் குறும்பு, சேட்டைங்கிறது இப்போது திடீர்னு புதுசா தோன்றுன ஒன்றுல்ல. ஆசிரியர்களை கிண்டல் செய்யும், பட்டப்பெயர் வைக்கும் மாணவர்கள் அந்த காலத்திலும் இருந்தாங்கதானே; அதுதான் காலத்துக்கு தகுந்தார்போல் வளர்ந்து இப்படி மாறியிருக்கு. தனியார் பள்ளி மாணவர்களுக்கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. ஒரு பிரச்சினைன்னு கூப்பிட்டா தனியார் பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றோர் வருவாங்க; அரசுப் பள்ளியில மாணவர்களை பெற்றோர்கள் முதலில் கொண்டுவந்து விட்டுவிட்டு போவதோடு சரி; பெற்றோர்களோ சொந்தங்களோ இல்லாமல் ஹாஸ்டல்களில் இருந்து வரும் குழந்தைகளும் இருக்காங்க. இந்த குழந்தைகள் வீட்டுக்கு திரும்பி சென்றால் படிக்கும் சூழல் இல்லை. வீட்டில் பெரும்பாலான அப்பாக்கள் மதுவுக்கு அடிமையானவங்களா, அம்மாக்களை போட்டு அடிப்பவங்களா இருப்பாங்க. அதைப் பார்க்குற பையன், அதை வீட்டுல செய்ய முடியாம பள்ளிக்கூடத்துல வந்து பண்ணுறான். எனவே, அந்த மாணவர்களின் சூழ்நிலையை புரிந்துகொள்ளணும்.

இதுல எல்லாருக்குமே பொறுப்பு இருக்கு. ஆனா, நிறைய பேர் குறும்பு செய்யும் மாணவர்களுக்கு தண்டனையா அடிப்பதை பரிந்துரைக்கிறாங்க. இன்னும் சிலர் இவங்க எல்லாம் படிக்கவேண்டிய தேவையில்லை, இவங்களை உடலுழைப்புக்கு அனுப்பனுங்கிறாங்க. இதெல்லாம் பழைய சாதிய படிநிலை கண்ணோட்டம்தான்ஞ்

அடியையும் உடல் உழைப்பையும் விட்டுவிடுவோம். பிரச்சினைக்குரிய பசங்ககிட்ட ஆசிரியர்கள் பேசுவதன் மூலம்தான் இதனை சரிசெய்ய முடியும். பேசிக் கொண்டிருந்தால் எப்போது பாடம் நடத்துவது என்று கேட்கக்கூடாது. பாடமும் உரையாடலும் சேர்ந்ததுதான் கல்வி. பள்ளிகளில் மனநல ஆலோசகர்களை நியமிக்க வேண்டும்.



மாணவர்களின் கற்றலுக்கும் இடையூறு ஏற்படுகிறது. இதை மற்ற மாணவர்களும் அவர்களிடம் கேட்க முடியாது. கேட்டால் அடிப்பார்கள் என்று அமைதியாக இருந்து விடுகிறார்கள். ஆசிரியர்களையும் ஆபாச சொற்களால் பேசுகின்றனர்.

இதற்கு சஸ்பெண்ட் செய்வது மட்டும் தீர்வாகுமா?.

'நாங்கள் சொன்னால் ஜட்ஜே நம்புவார்' என்பதைப் போல நாங்கள் என்ன செய்தாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்னும் எண்ணத்தை மாணவர்களிடம் விதைத்தது எது ?. இதிலிருந்து எப்படி மீட்டெடுப்பது ?.

அலைபேசியை மாணவர்கள் பள்ளிக்குக் கொண்டு வரக் கூடாது என்றால் அலைபேசியை கொண்டு வரும் மாணவர்களை என்ன செய்வது? ஆசிரியர்கள் மாணவர்களைப் பரிசோதிக்கக் கூடாது, ஏன் கொண்டு வந்தாய் எனக் கேட்கக் கூடாது என மேலிடத்து அறிவிக்கப் படாத உத்தரவு. இந்தச் சூழலில் ஆசிரியர்கள் என்ன முடிவு எடுப்பது?

மாணவர்களை ஏதாவது கேட்டு, விபரீதமாக ஏதாவது நடந்து விட்டால் அந்த ஆசிரியரே முழுப் பொறுப்பு. எந்த அதிகாரியும் ஆசிரியர்கள் பக்க நியாயத்தை உணராதது ஏன்? அரசு மேல் நிலைப் பள்ளிகளில் உள்ள, பதினொன்று, பன்னிரெண்டாம் வகுப்புகளைப் பிரித்து, கல்லூரிகளில் இணைத்து ஜூனியர் காலேஜ் என்று ஒன்றை ஏன் கொண்டு வரக் கூடாது? தமிழகத்தில் உள்ள துவக்கப் பள்ளிகள் நடு நிலைப் பள்ளிகளாகவும் நடு நிலைப் பள்ளிகள் உயர் நிலைப் பள்ளிகளாகவும்,உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப் படுகின்றன. அப்படி இருந்தும் மாணவர் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் மேல் இருக்கும் மேல்நிலைப் பள்ளிகளை இரண்டாகப் பிரித்தால் நலமாக இருக்கும்.

இதை அரசு முன்னெடுக்குமா?

ஓர் ஆசிரியருக்கு நாற்பது மாணவர்கள் என்றால் தான் கற்பித்தல் கற்பித்தல் சரியாக நடக்கும். ஆனால் அரசுப் பள்ளிகளில் சுமார் அறுபது, எழுபது மாணவர்கள் இருக்கிறார்கள். எனவே 1:40 என்ற விகிதத்தில் கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல், கல்வித் தரத்தை உயர்த்த அரசு கொண்டு வரும் திட்டங்கள் எவையும் சிறப்பான பலன் தருமா என்பது ஐயப்பாடே.

ரோம் நகரம் தீப்பற்றி எரியும் போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாராம். இவ்வளவு களேபரத்துக்கு இடையிலும் திங்கள் கிழமை முதல் சனிக் கிழமை வரை ஆறு நாட்கள் வேலை போதாதென்று, காலை, மாலை தனி வகுப்புகள், இரவு வகுப்புகள் என்று நீட்டுவதால் என்ன மாற்றம் வந்துவிடும்?

மாணவர்கள் வயது அப்படி. அவர்கள் அப்படித் தான் இருப்பார்கள். ஆசிரியர்கள் தான் அவர்களைத் திருத்த வேண்டும் என்று சொல்லும் பெற்றோர்கள், உங்கள் பிள்ளைகளை அதே அன்புடன் பேசி திருத்த உங்களுக்கும் பொறுப்பு உண்டு என்பதை உணராமல் இந்த பிரச்னைக்கு தீர்வு காணப்படுமா?

நடைபெறுகின்ற கவலை தரத்தக்க சம்பவங்களை தடுத்து நிறுத்தி மாணவச் செல்வங்களே சமுதாயத்தில் ஒரு நல்ல மரியாதைக்குரிய இடத்தில் வைத்து வாழ்த்திட அரசு பெற்றோர் மாணவர் சமூக ஆர்வலர்கள் ஊடகவியலாளர்கள் அனைவரும் தங்களுக்கான கூட்டுப் பொறுப்பு என்பதை உணர்ந்து செயலில் காட்டினால் மட்டுமே இதற்கு தீர்வு காண முடியும். அதுவரை பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற சூழல்தான்!

– கே.பி.கலியபெருமாள் (K.P)

# நேர்மை நிம்மதியையே தரும்!

**சோ**ழன் எக்ஸ்பிரஸ் சரியாக காலை எட்டு மணிக்கு சென்னை எழும்பூரில் இருந்து புறப்பட்டு விட்டது.

ஒரு இரண்டாம் வகுப்பு பெட்டியில் பஞ்சு மாமாவும், பார்வதி மாமியும் அமர்ந்திருந்தனர். தஞ்சாவூரில் உள்ள இரண்டாவது பெண் வீட்டுக்கு செல்கிறார்கள். லக்கேஜ் அதிகம் இல்லை.

பார்வதி மாமிக்கு எழும்பூரிலேயே ஆனந்த விகடன், மங்கையர் மலர் இரண்டும் வாங்கிக் கொடுத்து விட்டார். ரயில் புறப்பட்ட சில நிமிடங்களிலேயே மாமி அதில் மூழ்கி விட்டாள்.

மாமாவுக்கு அதில் இன்டெரெஸ்ட் இல்லை. ஹெட்போனை காதில் மாட்டிக் கொண்டு, யூட்யூபில் இருந்து டவுன்லோடு செய்த எம்.எஸ்.ஜி வயலின் கச்சேரியை கேட்க ஆரம்பித்தார்.

செங்கல்பட்டு தாண்டியதும் வீட்டிலிருந்து கொண்டு வந்த மிளகாய்ப்பொடி தடவிய இட்லியையும் சாப்பிட்டாகி விட்டது.

மாமிக்கு டிபனுக்கு அடுத்தது காபி குடித்தால் தான் டிபன் சாப்பிட்ட திருப்தி ஏற்படும்...

"ஏன்னா...காபி வந்தா வாங்குங்க... நான் சித்த நேரம் விகடன் பாத்துண்டிருக்கேன்

"இந்த பேண்ட்ரி கார் காபி நன்னா இருக்காதுடி... திண்டிவனம் ஸ்டேஷன்ல வாங்கித் தரேன்.."

"சரி"

வண்டி திண்டிவனத்தை அடையும்போது மணி 9.50.

வண்டி பிளாட்பாரத்தை அடையும் போதே தயாராக வாசலுக்கு போனார்.

நல்ல வேளை. ரெடியாக காபி விக்கிறார்.

ஓர் ஆள் இருந்தான்.

"ரெண்டு காபி குடுப்பா"

முதலில் ஒரு காபியை மாமியிடம் கொடுத்துவிட்டு, மீண்டும் இரண்டாவது காபியை சீட்டில் வைத்து விட்டு, அவனுக்கு பணம் கொடுக்க பர்ஸை எடுத்தார். ஒரு 200 ரூபாய் நோட்டுதான் இருந்தது. அதை அவனிடம் கொடுத்தார்.

சார் 20 ரூபாயா இல்லையா சார்.."

"இல்லையேப்பா"

அவன் பாக்கியை கொடுக்க, தன் பாக்கெட்டை துழாவினான். அதற்குள் வண்டி புறப்பட்டு விட்டது.

பாக்கெட்டை துழாவிக் கொண்டே வண்டியின் பின் ஓடி வந்தான். அதற்குள் வண்டி பிளாட்பாரம் எல்லையை கடந்து விட்டது. அதற்கு மேல் அவனால் ஓடிவர முடியவில்லை.

பஞ்சு மாமா சீட்டிற்கு திரும்பி, ஒன்றுமே நடக்காதது போல், காபியை உறிஞ்சி குடிக்க ஆரம்பித்தார்.

எல்லாவற்றையும் மாமி பார்த்துக்கொண்டு இருந்தாள்.

"என்ன 200 ரூபா போச்சா?"

"ஆமாம்.. அதுக்கென்ன இப்போ?"



"யாராவது அவனண்டை 200 ரூபாய் குடுப்பாளா?"

"அவன் பாக்கி தர ட்ரை பண்ணினாண்டி.. அதுக்குள்ள ட்ரெயின் கிளம்பிடுத்து.. அதுக்கு அவன் என்ன பண்ணுவான் பாவம்.."

"போதுமே உங்க சமத்து... அவனை அப்டியே நம்பறேள் பாருங்கோ.. அங்க தான் உங்க அசட்டுத் தனம் நிக்கறது.."

"அவன் என்னை வேணும்னு ஏமாத்தினான்னு சொல்றயா?"

"இல்லையா பின்னே.. அவன் சும்மா பாக்கிய

கொடுக்க வண்டி பின்னாடி ஓடி வரா மாதிரி ஸீன் போட்டிருக்கான்.. அதை கூட புரிஞ்சுக்க தெரியலையே உங்களுக்கு.."

"போனா போறது டி.. பாவம் ஏழை.."

"பணத்தை கோட்டை விட்டது இல்லாமே, அவனுக்கு வக்காலத்து வாங்கறேளா?"

"போதும்.. உன் ஆத்துக்காரனுக்கு சாமர்த்தியம் போறாது தான்... வாயை மூடிண்டு வா.."

இந்த சம்பாஷணையை வண்டியில் இருந்தவர்கள் அத்தனை பேரும் வேடிக்கை பார்த்தனர்.

அவர்களுக்கு இது ஏதோ சீரியல் பார்ப்பது போல் இருந்தது. பலர் மாமா அசடு



தான் என்ற தீர்மானத்துக்கு வந்தனர்.

சிலர் 'இந்த மாமிக்கு ஆனாலும் வாய் ஜாஸ்தி... மாமாவை எப்படி மட்டம் தட்டுகிறாள்' என்று நினைத்தனர். வண்டியின் வேகம் அதிகரிக்க, எல்லோரும் இந்த சம்பவத்தை மறந்து, அவர்கள் முன்பு செய்து கொண்டிருந்ததை தொடர்ந்தனர்.

மாமா மீண்டும் கச்சேரியை தொடர்ந்தார். எம்.எஸ்.ஜி

"ஞானமு சகராதா" வாசித்துக் கொண்டிருந்தார். ஆனந்தமாக கண்ணை மூடி ரசித்ததில் அந்த 200 ரூபாயை மறந்தே போனார்.

அரை மணி நேரத்திற்கெல்லாம் விழுப்புரம் ஜங்ஷன் வந்து விட்டது. அது ஒரு ரிசர்வேஷன் கம்பார்ட்மெண்ட் என்று பாராமல், கூட்டம் முண்டியடித்துக் கொண்டு ஏறியது. எல்லோருக்கும் அவரவர் அவசரம். கூடவே ஒரு 15 வயதுப் பையனும் ஏறினான்.

அவன் அங்குலம் அங்குலமாக முன்னேறி, பஞ்சு மாமாவின் சீட் அருகில் வந்து விட்டான்.

"சார் திண்டிவனம் ஸ்டேஷன்ல நீங்க காபி குடிச்சீங்களா?"

"ஆமாப்பா"

"சார்.. இந்தாங்க உங்க 180 ரூபாய்.." என்று சொல்லி, ஒரு நூறு ரூபாய் நோட்டையும், நான்கு 20 ரூபாய் நோட்டுகளையும் அவர் கையில் திணித்தான்.

அவருக்கு சட்டென்று ஒன்றும் புரியவில்லை.

"சார்.. நீங்க காபி வாங்கினீங்களே, அவர் பையன் தான் சார் நானு. இது சகஜமா அடிக்கடி நடக்கும் சார். திண்டிவனத்துல ட்ரெயின் ஒரு நிமிஷம் தான் நிக்கும்.. அதனால சில பேருக்கு பாக்கி சேஞ்ச் குடுக்க முடியாம போயிடும். தினமும் கொஞ்சம் பணத்தோட விழுப்புரம் வந்துடுவேன். அப்பா திண்டிவனத்தில் ட்ரையின் புறப்பட்ட உடனே போன் பண்ணி கம்பார்ட்மெண்ட் விவரம் சொல்லிடுவார். நான் இங்கே ஏறி பாக்கி சில்லறை குடுத்துட்டு பண்ருட்டில இறங்கி திரும்பி விழுப்புரம் போயிடுவேன் சார்" என்றான் அந்த பையன்.

"உங்கப்பா போன் நம்பர் குடுப்பா"

"இதோ சார்.."

"அய்யா.. உங்க பையன் என் பாக்கி 180 ரூபாயை திருப்பி குடுத்துட்டான்... ஆனா நான் பேசறது அதுக்காக இல்லை... அவனுக்கு நேர்மையை நீங்க கத்துக் குடுத்திருக்கீங்க பாருங்க.. அதுக்காக உங்களை பாராட்டியே ஆகணும்... அதுக்காக தான் போன் பண்ணேன்.."

"ரொம்ப நன்றிங்க சாமி.. நான் அஞ்சாங்கிளாஸ் தான் படிச்சிருக்கேன்.. ஆனா இந்த நேர்மையும் ஒழுக்கமும் இருக்கறதுனால தான் நிம்மதியா வாழ்க்கை நடத்த முடியுதுங்க சாமி... அதான் இதை என் ரெண்டு பசங்களுக்கும் சொல்லி குடுத்திருக்கேன்"

பஞ்சு மாமாவுக்கு நெஞ்சமெல்லாம் நிறைந்தது. கண்களில் நீருடன் அந்தப் பையனை தட்டிக் கொடுத்தார்.

பார்வதி மாமி, தன் கணவனை இப்போது பார்த்த பார்வையில் பெருமை நிறைந்திருந்தது.

எல்லோரும் எல்லோரையும் எப்போதும் ஏமாற்றுவதில்லை

நம்மை சுற்றி நல்லவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்...

நம்மில் சிலர் தான் அவர்களையும் சேர்த்து சந்தேகத்தோடு பார்க்கின்றோம்..

**அனுப்பியவர்: முகவரி ரமேஷ்**




1. பெண்கள் பையன்களுடைய சொந்த விவகாரத்தில் அனாவசியமாகத் தலையிடாதீர்கள். பையன் பெண்கள் பேரக்குழந்தைகளோடு அன்போடு பழகுங்கள்.

2. எனக்கு வயதாகி விட்டது என்று அடிக்கடி நினைக்காதீர்கள், சொல்லாதீர்கள். வயது சம்பந்தப்பட்ட வியாதிகள் வரலாம். அதைப்பற்றியே மற்றவர்களோடு சதா சொல்லாதீர்கள். நீங்கள் சாப்பிட வேண்டிய மருந்தைத் தவறாமல் சாப்பிடுங்கள். உங்களுக்கு உடல் சுகவீனம் வந்தால் மற்றவர்களுக்குத்தான் பிரச்சனை.

3. என்னுடைய காலத்தில், நான் படிக்கும்போது, அந்தக்காலத்தில் என்று சதா உங்களுடைய பழைய புராணத்தையே பேசிக்கொண்டிருக்காதீர்கள். மற்றவர்களுக்கு அது முக்கியமில்லை.

4. உடற்பயிற்சிகளைத் தவிர்க்காதீர்கள். வயதுக்கேற்றவாறு உங்களால் முடிந்த உடற்பயிற்சியைச் செய்யுங்கள். கண்ணை மூடி தியானத்தில் ஈடுபடுங்கள். உங்களுக்குப் பிடித்த பொழுதுபோக்கில் ஈடுபடுங்கள். அதை அனுபவியுங்கள்.

5. எதற்கெடுத்தாலும் சுருக் சுருக்கென்று கோபப்படாதீர்கள். அது உங்கள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.

6. சோர்ந்து காணப்படாதீர்கள். உங்கள் உடலை நீட்டாக வைத்துக்கொள்ளுங்கள். நல்ல ஆடையை உடுத்திகொள்ளுங்கள்.

உங்களுக்கு வயதாகி விட்டது என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். இதுதான் இயற்கை, யதார்த்தாம்.

மனதுக்குப் பிடித்ததைத் தள்ளிப்போடாதீர்கள். நாளை என்பது போனஸ் என்று நினைத்துச் செயல்படுங்கள்.



**– எம்.கிருஷ்ணன்,**
**தொழிலதிபர்**

# விருதுகள் பெற்ற முனைவர் கோ. விக்ரம்

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்தது தாராட்சி கிராமம். இங்கு டி. சுகுணாம்பாள் மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிய முனைவர். கோ.விக்ரம் இம்மாதம் இரண்டு விருதுகளை பெற்று இருக்கிறார்.

09.04.2022 அன்று கோவையில் அமைந்துள்ள Global Human University சார்பில் சிறந்த சிந்தனையாளர் மற்றும் சமூக சேவகருக்கான முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. 24/4/2022 அன்று சென்னை கலைவாணர்









அரங்கில் உலகத் தமிழ் பண்பாட்டு சங்கம் நடத்திய தமிழ்_ தமிழர் எழுச்சி மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு அரசு வெளிநாடு வாழ் தமிழன் நலத்துறை அமைச்சர் திரு மிகு செஞ்சி மஸ்தான் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் அவருடைய பேரன் திருமிகு.கவிஞர். கோ பாரதி அவர்களால் தமிழ்ப்பணி சிகரம் இந்த விருது,சான்று,கேடயம் வழங்கப்பட்டது.

சாதாரண குடும்பத்தில் பிறந்து சாதனை படைத்திட்ட முனைவர். கோ.விக்ரம் அவர்களுக்கு மித்ராடைம்ஸ் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

---


# மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

| |
|---|
| **ஆயுள்சந்தா : ரூ.2400.00** |
| **ஆறாண்டு சந்தா : ரூ.1440.00** |
| **ஆண்டு சந்தா : ரூ.240.00** |

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |

# வறுமையிலிருந்து வளமைக்கு வழிகாட்டிய புத்தகம்!

ஒரு நல்ல புத்தகம் வாசிப்பவனின் வாழ்வினை புரட்டிப்போடும். புரட்டிப்பார்க்கும் பக்கங்களில் பொறிக்கப்பட்ட வரிகளோ, புது அனுபவங்களை அளிக்கும், புது உலகினை கண்முன் விரிக்கும். ஏன், நம் வாழ்வின் அழிக்கமுடியாத அத்தியாயங்களாக மாறும்.

காலின் ராஜாவின் வாழ்வில் புது அத்தியாயத்தை துவங்கி வைத்ததும் ஒரு புத்தகமே... அப்புத்தகம் ஏற்படுத்திய தாக்கம் வடசென்னையில் வறுமையில் வளர்ந்த சிறுவனை அமெரிக்காவில் ஆண்டுக்கு ரூ30 கோடி வருவாய் ஈட்டும் தொழில்முனைவராக்கியது

இதுவரை 32 மில்லியன் பிரதிகளை விற்றுத்தீர்த்த ராபர்ட் கியோஸ்கி எழுதிய 'ரிச் டாட் புவர் டாட்' புத்தகம் தான் அது. பணத்தை பற்றி காலங்காலமாய் மக்கள் எண்ணும் கண்ணோட்டத்தை முற்றிலும் மாற்றக் கூடிய புத்தகம் என அறியப்பட்ட அப்புத்தகம் காலின் ராஜாவினையும் சிந்திக்கத் தூண்டியது. (தமிழில் கண்ணதாசன் பதிப்பகம் இந்தப் புத்தகத்தை வெளியிட்டு இருக்கிறது)

வடசென்னையில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து, வறுமை துரத்த வளர்ந்த அவர், புத்தகத்தின் சிலகுறிப்புகளை வாழ்க்கையின் துருப்புச்சீட்டாக்கிக் கொண்டு உழைக்கத் தொடங்கினார்.

எண்ணற்ற தூக்கமற்ற இரவுகளுக்குபின், இகாமர்ஸ் பிசினஸில் உடற்பயிற்சிக்கான உபகரணங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்து, ஆண்டுக்கு 30 கோடி ரூபாய் டர்ன் ஓவர் செய்யும் தொழில்முனைவராகி உள்ளார்.

சிறுவயதில் பட்டறைக்குச் செல்லத்தான் லாயக்கு என புறந்தள்ளப்பட்ட காலினை பற்றி போர்ப்ஸ் பத்திரிக்கையிலும் பிரசுரமாகி உள்ளது.


"என் பள்ளிக்காலத்தில் வீட்டில் கடுமையான வறுமை. ரேஷன் அரிசியை மட்டும் சோறாக்கி சாப்பிட்டு கடத்திய நாட்களும் உண்டு. நான் படிப்பில் சுமாரான பையன். படிக்கலைனு 7ஆம் வகுப்பையே இரண்டு வருஷம் படிக்கவச்சாங்க. நம்ம சமூகத்தை பொறுத்தவரை நல்லா படித்தால் நல்ல வேலை, நல்ல வேலை கிடைத்தால் நல்ல வாழ்க்கை என்றே சொல்லிக் கொடுத்து வளர்க்கின்றனர். அதனாலே, என்னை படிப்புக்கு லாயக்கற்றவன், பட்டறைக்கு தான் வேலைக்கு போவேன்னு சொல்லிச் சொல்லி என்னிடமிருந்த கொஞ்ச நஞ்ச தன்னம்பிக்கையையும் உடைச்சிட்டாங்க.

அந்த சமயத்தில் தான், பாக்சிங்கில் இறங்கினேன். என்னால எதுவும் முடியாதுனு மட்டம் தட்டியவர்களிடம் என்னை நிரூபிக்க உழைத்தேன். மாநில, தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டேன். ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் காலேஜ் சீட்டும் கிடைத்தது.

தொடர்ந்து, பாக்சிங்கிலும் தடகள போட்டிகளிலும் கலந்து கொண்டு, பதக்கங்களை வென்றேன். உன்னால எதுவும் முடியாதுனு ஒதுக்கப்பட்டவனுக்கு அந்த பதக்கங்கள் புது நம்பிக்கையை அளித்தன. என் வாழ்க்கையின் முதல் வெற்றி. என்மீது எனக்கே நம்பிக்கையை ஏற்படுத்தியது" என்கிறார் காலின்.

பி.இ கம்ப்யூட்டர் சைன்ஸ் முடித்த அவர், கணினி தொடர்பான சிறுசிறு பணிகளை மேற்கொண்டு வந்துள்ளார். அப்படி, கம்ப்யூட்டர் அசம்பிளிங் பணி செய்து ரூ.5000 சம்பாதித்துள்ளார். முதன் முதலில் அவ்வளவு பெரும் தொகையை என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்ததாய் கூறும் காலினின் இன்றைய இரண்டுமணி நேர வருவாய் அது.

"முட்டி மோதி ஐடி கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்துவிட்டேன். வேலைக்குச் சேர்ந்த கொஞ்ச காலத்திலே ஆன்சைட்டில் அமெரிக்காவுக்கு சென்று பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. அமெரிக்காவுல இரண்டு, மூணு கம்பெனியில் மாறி மாறி வேலை செய்தேன். ஆனா, திடீரென்று வேலையைவிட்டு நிப்பாட்டிட்டாங்க. கிட்டத்தட்ட 3 மாசம் வேலையே கிடைக்கல. அப்போ தான் புது கார் வேற வாங்கியிருந்தேன், அதுக்கு மாசமாகினா 1,500 டாலர் (ரூ.1லட்சம்) இஎம்ஐ கட்டணும். வேலையும் கிடைக்காமல் ரொம்ப கஷ்டப்பட்டேன்."



3 மாதத்திற்கு பிறகு நிதி சார்ந்த நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அப்போ தான், இப்படியே வாழ்க்கையை கொண்டு சென்றிடக்கூடாது என்ற எண்ணம் வந்தது காலினுக்கு. அப்போது நண்பர் ஒருவர் 'Rich Dad, Poor Dad' என்ற புத்தகத்தைக் கொடுத்தார். "என் வாழ்க்கையையே மாற்றிய புத்தகம் அது. எனக்குள் பல சிந்தனைகளைத் தூண்டியது."என்கிறார் காலின்.

"அந்தசமயத்தில், 'அமேசானில் பொருள்களை விற்பது எப்படி?' என்று பயிற்சியளிப்பதாக ஒரு விளம்பரத்தை பார்த்தேன். பயிற்சித் தொகை 5000 டாலர்னு (ரூ.3,63,000) போட்டிருந்தது. இதை முயற்சிக்கலாம்னு தோணுச்சு. ஆனா, என்னால கண்டிப்பாக அவ்வளவு பணம் செலவழிக்க முடியாது. இருந்தாலும் கத்துக்கலாம்னு ஆன்லைன் விற்பனை தொடர்பான புத்தகங்களை நிறைய வாங்கிப் படித்தேன். யூடியூப் வீடியோக்கள் பார்த்தேன். நிறைய மனிதர்களை சந்தித்து ஆலோசனை கேட்டேன். ஒரு நாளைக்கு 19 மணி நேரம் இதை பத்தி மட்டுமே கத்திட்டு இருந்தேன். தினமும் நியூயார்க்கிலிருந்து நியூஜெர்சி வரை 2 மணி நேரம் டிராவல் பண்ணி தான் ஆபிசுக்கு போகணும். அந்த நேரத்தில் புத்தகத்தை படிச்சிட்டே போவேன். இகாமர்ஸ் தளத்தில் பொருளை விற்கபோகிறோம்னு முடிவு பண்ணியாச்சு. பிராண்ட்டின் பெயர்லாம் யோசித்துவிட்டேன். ஆனா, என்ன பொருள் விற்பதுனு முடிவு பண்ணாமல், நாட்கள் ஓடிகிட்டே இருந்தது. மனைவி ஆன்ஜியிடம் இதுமாதிரி ஆன்லைனில் பொருளை விற்கபோகிறேன்னு சொன்னதும், கண்டிப்பா விற்கமுடியாதுனு மில்லியன் டாலர் பெட் கட்டினாங்க. அதையும் சவாலாக எடுத்துக் கொண்டேன்.

"அதிகத் தொகை முதலீடு செய்யாமல், 100 டாலருக்கு மடக்கி வைத்து கொள்ளும் வாட்டர் பாட்டில்களை சூப்பர் மார்க்கெட்டில் வாங்கினேன். நானும், என் மனைவியும் ஒருநாள் இரவு முழுக்க உட்கார்ந்து அதை பேக் பண்ணோம். இபேயில் பொருள்களைப் பதிவு செய்தோம். நினைச்ச மாதிரி அமையவில்லை எந்தவொரு ஆர்டரும் கிடைக்கல.

"கம்ப்யூட்டர் சையின்சுக்கும் காமர்சுக்கும் என்ன தொடர்பு? ஒன்னும் கிடையாதே. காமர்ஸ்னாலே என்னனு தெரியாது. அப்புறம் எப்படி இகாமர்ஸ் பற்றி தெரியும்.

"ஒவ்வொன்றாய் கற்று அறிந்தோம். ஆர்டர் வரத்துவங்கியது. கிடைத்த லாபத்தில் அதே புராடெக்ட்டை மீண்டும் விற்பனை செய்தோம். சந்தையின் நிலவரத்தையும், ஆன்லைனில் விற்பனை செய்வது குறித்தும் அறிந்துகொள்ள அது போன்று மூன்று முறை விற்பனை செய்தோம்.

"அந்த விற்பனையின் மூலம் 100 டாலர் முதலீடு, 2000 டாலராக பெருகியது. அச்சிறு வெற்றி சரியான பாதையில் பயணிக்கிறோம் என்பதை உறுதி செய்தது. அதில் கிடைத்த அனுபவம், எங்களது சொந்தத் தயாரிப்பை உருவாக்கத் தூண்டியது.

" 'ரிம் ஸ்போர்ட்ஸ்' 'Rim Sports

ஃபிட்னஸ் உபகரணங்களான வொர்க் அவுட் க்ளவுஸ், க்ளூட் பேண்ட்ஸ், வெயிட் லிஃப்டிங் பெல்ட்ஸ் போன்ற எங்களது சொந்த டிசைனை உற்பத்தி நிறுவனங்களிடம் தயாரித்து வாங்கி, விற்பனையைத் துவக்கினோம். 15 வருட பாக்சிங் அனுபவத்தில் எங்களுக்குத் தேவையான உடற்பயிற்சி உபகரணங்களைத் தேடித் தேடி வாங்கியதிலே இதை பிசினஸா செய்யும் யோசனை வந்தது.



"தொடக்கத்தில், 1500 டாலர் மதிப்புள்ள சொந்தத் தயாரிப்புகளின் மூலம் தான் விற்பனையை துவக்கினோம். ஒரு விற்பனைக்கு 10 டாலர் லாபம் என்ற கணக்கில், நாளொன்றுக்கு 10 முதல் 20 விற்பனைகள் நடந்தன.

"பிசினஸ் தொடங்கினாலும் நாங்க வேலையை விடவில்லை. என் மனைவி ஆன்ஜி, ஆன்லைன் வணிகத்தில் அவ்வளவு நம்பிக்கை இல்லாத போதும் எனக்கு முழு சப்போர்ட் கொடுத்தார். இரவில் பொருட்களை பேக்கிங் செய்து கொடுப்பார். நான் ஆபீஸ் சென்றுவிட்டு பிரேக் சமயத்தில் பார்சலை கொரியர் செய்துவிடுவேன். 9 டு 5 வேலை வேண்டாம்னு வந்தா, இது 24மணி நேர வேலையாகிருச்சு.

"வீட்டு ரூமிலே வேலைக்குலாம் ஆள் வைக்காமல், நாங்கள் இருவருமே எல்லா வொர்க்கையும் செய்து கொண்டோம். கிட்டத்தட்ட, தொழில் தொடங்கி 1 மில்லியன் டாலர் வருவாயை ஈட்டத்தொடங்கிய போதும், ஒரு பணியாளர்கூட நியமிக்கலை.

இப்போ எங்க நிறுவனத்திற்காக சென்னையில் எங்க பணியாளர்கள் வேலை செய்றாங்க. முதலில் என் மனைவி வேலையிலிருந்து விலகினாங்க. அமெரிக்காவுலயும் சென்னையிலும் மாறி மாறி வசிச்சபடியே நானும் தொழில்ல கவனம் செலுத்தினேன். "2018இல் ஆபீஸ் வேலையை விட்டுட்டு, முழுநேர தொழில்முனைவோர் ஆனேன். e-bayவை தொடர்ந்து, அமேசான், வால்மார்டிலும், எங்களது பிராண்டான 'ரிம் ஸ்போர்ட்ஸ்' (rim sports) என்ற பெயரிலும் ஆன்லைன் விற்பனைத்தளத்தை துவங்கி உடற்பயிற்சி, சில விளையாட்டு உபகரணங்களுடன், அந்தப் பயிற்சியின்போது அடிபட்டவங்களுக்கு உதவும் வகையிலான பயன்பாட்டு உபகரணங்களையும் விற்பனை செய்கிறோம்.

"எங்களது சொந்த தயாரிப்புகள் சிலவற்றிற்கு காப்புரிமை பெற்றுள்ளோம். விரைவில் இந்தியாவிலும் கால் பதிக்கிறோம். இது தான் என் பயணம்..."என்று கூறி முடித்தார் காலின். இப்போது இவரது ஆண்டு வருமானம் கொஞ்ச நஞ்சமல்ல ரூபாய் 30 கோடி! இணையதள முகவரி : rim sports

*- அம்ரா பாண்டியன்*

*தொலைபேசி எண்: 9080181863*

## அன்று ஆடிய விளையாட்டுகளின் அர்த்தம்...

ல்லாங்குழி – இருக்கும் இடத்தில் எடுத்து இல்லாத இடத்தில் கொடுக்கும் குணம் வளர...

பரமபதம் – ஏற்றம், இறக்கம் இரண்டும் இருப்பதே வாழ்க்கை என்பதை உணர்த்த...

கில்லி – கூட்டல், பெருக்கல் கணக்கைக் களிப்புடன் மகிழ்ந்து கற்க....


தாயம் – வெட்டி வெளியே எறிந்தாலும் மீண்டும் முயன்று தொடங்கி முன்னேற....

சதுரங்கம் – இதர வழி இல்லாதபோதும் இறுதிவரை போராடும் உறுதி மனம் பெற...

நொண்டி – சமமாக இல்லாதபோதும் சாதிக்கத் தூண்டும் சக்தியைப் பெற...

கண்ணாமூச்சி – ஒளிந்து இருப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கான பொறுமையையும் தானே ஒளிந்து மகிழ்ந்து இருக்கும் பெருமையையும் பெற....







பல்லாங்குழி ஆடலாம்...

வட்டமாக குழி உள்ள பலகையில் புளியங்கொட்டை அல்லது முத்துகளை கொண்டு விளையாடும் பல்லாங்குழி தமிழர் வாழ்வில் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டாகும். குழந்தைகள் இந்த விளையாட்டை விளையாடுவதால் விரலுக்கு பயிற்சியும், கணக்கு பயிற்சியும் பெற முடியும். முத்துகளை நகர்த்தும் வகையால், இருக்கும் இடத்தில் இருந்து எடுத்து, இல்லாத இடத்திற்கு கொடுக்கும் குணம் வளரும்.



# திருப்பதி போனா திருப்பங்கள் வருமா?



நடிகை திரிஷா தனக்கென தனி பாணியில் தமிழ் சினிமாவில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்து வருகிறார். இத்தனை வருடங்கள் அதே லுக்கில் இருக்கும் அவரது பிட்னெஸ் சீக்ரெட் தான் என்ன என எல்லோருக்கும் ஆச்சர்யப்படும் அளவுக்கு இருந்து வருகிறார்.

த்ரிஷா தனது பிறந்தநாளை கொண்டாடும் நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் அம்மாவுடன் சென்று சாமி தரிசனம் செய்திருக்கிறார். அதன் பின் அங்கு ரசிகர்கள் உடன் செல்பி எடுத்துக்கொண்டிருக்கிறார்.

இனி மீண்டும் திரையில் வலம் வரும் வாய்ப்புகள் வருமா!

## விசித்திரன் - ஆர்.கே.சுரேஷ்!




இயக்குநர் பாலா தயாரிப்பில் ஆர்.கே சுரேஷ் நடித்துள்ள 'விசித்திரன்' படம் வெளியாகியுள்ளது.

மலையாளத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு வெளியான 'ஜோசப்' படத்தின் தமிழ் ரீமேக்தான் 'விசித்திரன்'. ஜோஜு ஜார்ஜ், பிரபல இயக்குநர் திலீஷ் போத்தன், ஆத்மியா நடிப்பில் வெளியான இப்படத்தை எம். பத்மகுமார் இயக்கியிருந்தார். தன்னிடமிருந்து பிரிந்து சென்ற தனது முன்னாள் மனைவி விபத்தில் இறந்துவிட, அது விபத்தல்ல கொலை என்பதை கண்டுபிடிக்கும் மிரட்டலான ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரியாக ஜோஜு ஜார்ஜ் நடிப்பில் மிரட்டியிருப்பார்.இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை கடந்த செப்டம்பர் 23 ஆம் தேதி வெளியிட்டார் நடிகர் சிவகார்த்திகேயேன். டீசரை நடிகர் சூர்யா வெளியிட்டார்.இந்த படத்தில் ஆர்.கே.சுரேஷ் நடிப்பு அனைவராலும் பெரிதாக பாராட்டப்படுகிறு.

## பயணிகள் கவனிக்கவும்




ஆல் இன் பிக்சர்ஸ் என்ற பட நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் விஜய ராகவேந்திரா தயாரித்திருக்கும் திரைப்படம் 'பயணிகள் கவனிக்கவும்'. மலையாளத்தில் 'விக்ருதி' என்ற பெயரில் வெளியாகி வெற்றி பெற்ற திரைப்படத்தின் தமிழ் பதிப்பான இந்த படத்தில் கதையின் நாயகர்களாக நடிகர்கள் விதார்த், கருணாகரன், சரித்திரன், நடிகைகள் லட்சுமி பிரியா சந்திரமௌலி, மாசூம் சங்கர் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். எஸ் பி சக்திவேல் இயக்கியிருக்கும் இந்த திரைப்படம் 'ஆஹா' டிஜிட்டல் தளத்தின் வெளியாகும் முதல் ஒரிஜினல் படைப்பு. இந்த திரைப்படம் ஏப்ரல் 29ஆம் தேதி முதல் ஆஹா டிஜிட்டல் தளத்தில் வெளியாகி இருக்கிறது.

இதற்காக திரையுலக பிரபலங்கள் கலந்து கொள்ளும் சிறப்புக் காட்சி திரையிடப்பட்டது. இதில் நட்சத்திர நடிகர்களான சூரி, இயக்குநர்கள் அறிவழகன், சாம் ஆண்டன், ரவிக்குமார், கேபிள் சங்கர், கார்த்திக் யோகி, படத்தின் இயக்குநர் சக்திவேல், நடிகர்கள் விதார்த், கருணாகரன், மாசூம் சங்கர், நடிகை ரூபா மஞ்சரி, மணிகண்டன், வினியோகஸ்தர் சக்திவேல், தயாரிப்பாளர் எஸ் தாணு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். படத்தை பார்வையிட்ட அனைவரும் சமூக வலைதளம் குறித்த சரியான பார்வையை இந்த திரைப்படம் இளைய தலைமுறையினருக்கு வழங்கியிருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# வாழ்நாள் சாதனையாளர் வடிவுக்கரசி!



1979ல் வெளியான கன்னிப்பருவத்திலே படம் மூலம் அறிமுகமானவர் வடிவுக்கரசி. தொடர்ந்து பல முன்னணி நடிகர்களுடன் கதாநாயகியாகவும், பின்னாளில் முன்னணி நடிகர்களுக்கு அம்மாவாகவும், இன்றைய சீரியல் நடிகைகளுக்கு பாட்டியாகவும் நடித்து இன்றுவரை சின்னத்திரை வெள்ளித்திரை ஆகியவற்றில் வெற்றிக்கொடிநாட்டி வருபவர் வடிவுக்கரசி.

சிவாஜி அப்பாவை வெச்சு நிறைய ஹிட் படங்கள் கொடுத்த இயக்குநர் ஏ.பி.நாகராஜன்தான் என்னோட பெரியப்பா. அதனால சினிமா பத்தின விஷயங்கள் ஓரளவுக்குத் தெரிஞ்சாலும், நடிக்கும் ஆர்வம் எனக்கு இல்லை. நல்லா வசதியா வாழ்ந்த குடும்பம் எங்களுது. திடீர்னு பெரிய வறுமை ஏற்படவே, ஆழ்வார்பேட்டையில துணிக்கடையில கேஷியரா வேலை செஞ்சுட்டிருந்தேன். அதுக்குப் பக்கத்துல இருந்த ஸ்டூடியோவுல என்னோட போட்டோவைப் பார்த்துட்டுத்தான், `கிழக்கே போகும் ரயில்' படத்துல என்னைத் தேர்வு செஞ்சார் பாரதிராஜா சார். ஆனா, அந்தப் படத்துல நடிக்க எனக்கு வாய்ப்பு கிடைக்கல. பிறகு, `சிவப்பு ரோஜாக்கள்' படத்துல என்னை நடிக்க வெச்சார் அவர். அதுல, மாடர்ன் பொண்ணா, அடாவடி ரோல்ல நடிச்சது நான்தானான்னு அடிக்கடி ஆச்சர்யப்படுவேன்.

வா கண்ணா வா' படத்துல சிவாஜி அப்பாவுக்கு மகள் ஸ்தானத்துல நடிச்ச நிலையில, `முதல் மரியாதை'யில அவருக்கு மனைவி ரோல் எனக்கு. கே.ஆர்.விஜயா அம்மா மாதிரி குடும்பப்பாங்கான ரோல்னு நினைச்சு மூக்குல ரெண்டு பக்கமும் மூக்குத்தி குத்திகிட்டு எதிர்பார்ப்போடு போனா, சிவாஜி அப்பாவைத் திட்டி நடிக்கிற மாதிரி நெகட்டிவ் ரோல் எனக்கு கொடுத்தாங்க. சங்கடத்துடன் நடிச்சாலும், என்னை ரொம்பவே ஊக்கப்படுத்தினார் சிவாஜி அப்பா. பிறகு, பல படங்கள்ல அவருடன் சேர்ந்து நடிச்சேன். `அருணாச்சலம்' படத்துல ரஜினி சாரைத் திட்டி நடிச்சதால, அவரோட ரசிகர்களால சில சிக்கல்களை எதிர்கொண்டேன். ஆனா, என்னோட ஒவ்வொரு ஷாட் நடிப்பையும் ரசிச்சு ஊக்கப்படுத்தினார் அவர்.

என்னோட அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செஞ்சுக்கவும், என்னை நம்பியிருக்குற என்னோட குடும்பத்தினர் சந்தோஷமா இருக்கவும் நான் நடிக்க ஓடித்தான் ஆகணும். அதனாலயே, எந்தப் பாகுபாடும் இல்லாம எல்லாத் தரப்பட்ட கலைஞர்களுடன் இணைஞ்சு வேலை செய்யுறேன்.




பல வருஷமாவே எனக்கான வருமான வாய்ப்பை உறுதி செய்றது சின்னத்திரைதான். இதுலயும் நிறைய சீரியல்கள்ல பலதரப்பட்ட ரோல்கள்ல நடிச்சுட்டேன். அதுல, என்னோட வாழ்க்கையோடு ஒன்றிப்போன `திருமதி செல்வம்' எப்போதும் மனசுல நிற்கும் புராஜெக்ட். `ரோஜா' உள்ளிட்ட சில சீரியல்கள்ல நடிக்குறதாலதான், தினசரி தேவைகளைப் பூர்த்தி செஞ்சுக்க முடியது. இதுவும் இல்லைனா, என்னை மாதிரியான நடுத்தர கலைஞர்களோட நிலைமை ரொம்பவே மோசமாகிடும்.

எங்களைக் காப்பாற்றுவது சின்னத்திரை தான்!

அலுவலகத்துக்கு உள்ளாக முகமூடி அணிந்தது போல் ஒருவர் உள்ளே வந்தார்.. யாருங்க நீங்க என்று கேட்டோம்.. தொப்பி, கர்சீப், கூலிங்கிளாஸ் எல்லாவற்றையும் கழட்டிவிட்டு நான்தான் கபாலி கான் என்றார்.

**"என்னங்க வேஷம்"**

"வேஷம் இல்லைங்க வெயிலோட கொடுமை அதான் இப்படி கறுத்து, வெறுத்து, விறுவிறுத்து வந்திருக்கேன்" என்றார்.

அடடா டிஆர் மாதிரி பேச ஆரம்பிச்சிட்டாரு ஏகப்பட்ட விஷயம் இருக்கும் போலிருக்கே என்று நினைத்துக் கொண்டே வெயிலுக்கு இதமாக தர்பூசணி, வெள்ளரிக்காய் துண்டுகளை பதமாக பரப்பி மேலே ஐஸ் துண்டுகளை எடுத்து கொடுத்தோம். அதை சுவைத்துக் கொண்டே

"அப்பாடா"என்றார்.

"என்ன கூல் ஆயிட்டீங்களா"

ம்..என்றவர் இப்படித்தான் ஆட்சியில் இருப்பவர்கள் ஒவ்வொரு பிரச்சனையையும் சமாளித்த பிறகு பெருமூச்சு விடுகிறார்கள்.

"ஒஹோ"


ஆனால் முதலமைச்சர் எல்லாவற்றையும் நிதானமாக கையாண்டு கூடுமானவரையில் மக்களுடைய நம்பிக்கைக்கு குறைவில்லாமல் நடந்து வருகிறார்.ஆனால்..

**"என்ன"**

"சில நேரங்களில் தன்னுடைய கட்சிக்காரர்களோ, கூட்டணி கட்சிக்காரர்களோ செய்கின்ற விமர்சனங்கள் அவருக்கு மன வருத்தத்தை ஏற்படுத்துகிறது"..

**"அப்படியா? "என்ன சொல்றீங்க"**

அடிக்கடி இது திராவிட மாடல் ஆட்சி அண்ணாவின் ஆட்சி கலைஞரின் ஆட்சி என்று சொல்லுகிறார் முதல்வர்.. ஆனால் திராவிடர் கழகம் போன்ற அமைப்புகளால் இந்துக்களுக்கு எதிராக இந்து மதத்திற்கு எதிராக கருத்துக்களை வெளிப்படுத்தும்போது அது தேவையற்ற சங்கடத்தை ஆட்சிக்கு உருவாக்கிவிடுகிறது.





**"எப்படி சொல்றீங்க"**

இந்து மதத்துக்கு எதிரான கட்சி திமுக என்பதை மக்களிடையே பரப்புவதற்கு காத்திருக்கும் பாஜகவிற்கு உதவுவது போல சில விஷயங்களை இவர்கள் செய்வதால் ஆட்சிக்கு சங்கடம் ஏற்பட்டு விடுகிறது என்ற முணுமுணுப்பு கட்சித் தொண்டர்கள் மத்தியில் எழுகிறது!"

**"என்ன நடந்தது?"**

சிவராத்திரியன்று மயிலாப்பூரில் அரசு சார்பில் இந்து அறநிலையத்துறை சார்பில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்ட போது அதை நடத்தக்கூடாது என்று வீரமணி குறிப்பிட்டார். அந்தத் துறைக்கு அமைச்சராக சேகர்பாபு திட்டமிட்டபடி நிகழ்ச்சி நடக்கும் என்று சொல்லி அதை நடத்தி வைத்தார். அதைப்போல காலங்காலமாக நடந்து வரும் சில மத சடங்குகளுக்கு இப்போது எதிர்ப்பு தெரிவிப்பதால் அது தேவையற்ற சங்கடத்தை ஆட்சிக்கு ஏற்படுத்திவிடுகிறது.. உதாரணத்திற்கு மயிலாடுதுறை ஆதீனமடத்தில்பட்டினப்பிரவேசம் இருந்தது ஆதீனத்தை பல்லக்கில் வைத்து தூக்கிச்செல்லும் வைபவம்.. அதை எதிர்த்து திராவிடர் கழகம் போராட்டம் நடத்தப்போவதாக அறிவிக்க மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அந்த நிகழ்ச்சிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத இத இதத்தான் நாங்க எதிர்பார்த்தோம் ங்கற மாதிரி திமுகவின் செல்வாக்கோடு ஒப்பிடும்போது ஒரு வார்டுக்கு கூட




எதிர்கொள்ள முடியாத அமைப்புகள் எல்லாம் விட்டேனா பார் நடத்தாமல் விடமாட்டேன் முடிந்தால் தடுத்து பார் என்றெல்லாம் சவால் விடும் போது அதை பார்க்கிற திமுக தொண்டர்கள் வீரமணிக்கு இது தேவையா என்று மனதுக்குள் வேதனைப்படுகிறார்கள்"

சரி பல்லக்கு தூக்குவது என்பது மனித உரிமைக்கு எதிரானது அல்லவா அதனால்தான்

தி.க. போராடுகிறது என்று கேட்டால் பதிலுக்கு முதல்வர் தானே எங்கள் கட்சியில் 70% பேர் இந்துக்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார் அப்படியானால் அவர்களது மனதில் சங்கடத்தை ஏற்படுத்தாதா? என்று எதிர்கேள்வி வைக்கிறார்கள்.

இந்த விஷயத்தில் எடப்பாடி பழனிச்சாமி ஆதீன பட்டிணப் பிரவேசத்திற்கு ஆதரவு தெரிவித்து சட்டசபையில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வருகிறார்.

***அண்ணாமலை இலங்கைப்போய் வந்துருக்காரே?***

ஆமாம் அவருக்கு அரசுப் பதவி தேடி வரப்போகிறது என்று அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கிறார்கள்.. அது மாநிலங்களவை உறுப்பினர் பதவியா, மத்திய அமைச்சர் பதவியா, ஆளுநர் பதவியா என்று விவாதங்கள் போய்க்கொண்டிருக்கிறது.

***"கட்சிக்காரர்களுக்கு சந்தோஷம்தானே"***

ஆமா சில பேருக்கு அவருக்கு பதவி கிடைத்ததே என்ற சந்தோஷம் சில பேருக்கு அவர் தலைவர் பதவியிலிருந்து போகிறார் என்ற சந்தோஷம்..

***என்ன சொல்றீங்க?***

ஆமாம் அண்ணாமலை வந்தபிறகு கட்சி பரபரப்பாக மக்கள் மத்தியில் பேசப்பட்டு




வருகிறது.. கட்சிப் பதவி என்றாலும் அதிகாரத்தில் இருந்தவர் என்ற வகையில் கட்சியை ராணுவக் கட்டுப்பாடு வைத்திருந்தார் என்பது யாரும் மறுப்பதற்கில்லை. அது நீண்டகாலமாக கட்சியில் இருந்து வரும் சிலருக்கு வருத்தத்தைத் தந்தாலும், புதிதாக கட்சிக்கு வந்தவர்களுக்கு உற்சாகத்தைத் தான் தந்திருக்கிறது. அந்த ஆர்வமிகுதியில் சிலபேர் அவரை கருப்பு எம்ஜிஆர் என்றும் வருங்கால முதல்வர் என்றும் அழைப்பதுதான் பொதுமக்கள் மத்தியில் கேலி பொருளாக மாற்றி இருக்கிறது..

வரட்டா என்று சொல்லிக்கொண்டே மீண்டும் முகமூடியாக மாறி வெளியேறினார் கபாலிகான்.

# இன்னலுக்கு காரணம் இயற்கையை மறந்தது தான்!



பன்னெடுங்காலமாக பார்போற்றும் விதத்தில் பண்பாடு,கலாச்சாரம் போன்றவற்றில் தலைச்சிறந்தவர்களாக நாம் வாழ்ந்து வருகிறது வரலாற்றுண்மை.தமிழும் தமிழர்களும் அறிவியல் மற்றும் வாழ்வியல் கோட்பாட்டோடு தொடர்பு படுத்திக்கொண்ட இயற்கை நெறிமுறைகளை கடைப்பிடித்து வாழ்பவர்களாக அடையாளம் காட்டப்பட்டவர்கள் ஏனெனில், இயற்கையைச் சார்ந்து வாழ்ந்தவன் என்ற பெருமையோடு உலகை வலம்வருகிறது என்பதும் உண்மைதான்.

ஆனால் காலப்போக்கில் நமது வாழ்வியல் முறைகளில் சில சீர்கேடுகள் வளர்ந்துவருவதையும் அது நமது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்பதையும் அறியாமல் நாகரீக மோகத்தில் மூழ்கி மோசம்போய்கொண்டிருக்கின்றோம்.இயற்கையோடு வாழவேண்டுமென உலகிற்கு அறிமுகம் செய்துவைத்தவன் தமிழன். பல இயற்கை மூலிகைகளினால் பாரம்பரிய வாழ்வை நாடி நல்லவாழ்வினைத்தேடி நல்லவர்களோடு கூடி வாழ்ந்தத்தமிழனின் இடைப்பட்டக்காலங்களில் ஊடுறுவிய கலாச்சார சீரழிவை புறந்தள்ளிவிட்டு பயணிக்க மறந்துவிட்டோம். இதனை நமது வாழ்வின் கருப்புக்காலம் எனவும் வரையறுக்கலாம்.

நாட்டின் தட்பவெப்ப நிலைக்கேற்றார்போல அவ்வப்போது காய்க்கும் காய்களையும் கனிகளையும் உண்டுமகிழ்ந்த நம் முன்னோர்களின் ஆயுட்காலம் அகவை நூறினைத்தாண்டியது குறிப்பிடத்தக்கது எனினும் இன்றைய இளையோர்களின் வாழ்க்கைமுறை அவ்வாறாக பெரிதும் போற்றும்படி இல்லையென்பதே பல்லோரின் கருத்து. முள்குத்தினப்பலூனாய் எள்ளாய் இளைத்துப்போய்கொண்டிருக்கிறது. நமது பாரம்பரிய உணவான தினை ,வரகு,கம்பு, கேழ்வரகு, குதிரைவால் அரிசி, நிலக்கடலைமற்றும் எள் போன்றவற்றை மாற்றானுக்கு விற்றுவிட்டதின் சூட்சமம் அறியாமல் சொல்லண்ணா துக்கத்தை அடைந்துவருகிறோம். நாவினில் நஞ்சை சுவைத்து அதுவே நலமென்று எண்ணுகின்ற நாசக்கார ஆசைக்கு அடிமையாகிவிட்ட ஊடக உசுப்பலும் உயிர்காக்கா சாலையோர துரித உணவுமே காரணம் என்பதை நாம் உணரமறுக்கின்றோம்.



பகட்டுவாழ்வின் மீது பற்றுவைத்து பாசக்கயிற்றை படையல்வைத்துதான் கழுத்தில்மாட்டி திரிகின்றோம்தினமும் என்பது உள்ளபடியே உண்மை.

குளிர்நீர் பானங்களை பருகிவிட்டு உடல்கட்டான இளமையை இரவுக்கே எரிக்கப்படும் விறகாகிவிட்டார்கள். கீரையையும் வேரையும் மறந்துவிட்டு ஊரையும் பேரையும் மாற்றிகொண்டால் நாரைக்கு நண்டு நட்பாகுமா..?

சாலையோரங்களில் பெருகிவரும் விருந்தகமும் மருந்தகமும் அவசியம் என்ற அவசரக்குடுக்கைகளின் சோம்பேறித்தனத்துக்கு சோறாக்கிப்போட்டு வருவதை எப்படி மறந்தோம்..? எல்லோருக்குமான பொதுவியல் வாழ்வை ஏனோ தனக்கென மட்டும் என்ற சில தற்குறிகளின் தவறான போதையும் இளைஞர்களின் நெஞ்சில் பதிவிடப்பட்டுவருகிறது. எண்ணங்களில் சொகுசினைப்புகுத்தி சின்னத்தனமான செயல்களால் தன்னை உயர்த்திக்கொள்வதையும் குறிப்பிடவேண்டும். வளங்கள் நிறைந்த நமது மண்ணில் வறுமையை விதைத்து நீரூற்றியதன் பின்னணியை வருங்கால இளைய தலைமுறையினர் கற்றிடல் அவசியம்.உலகையே ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கும் கொரனாவால்





நமதான இயற்கை மருத்துவத்தின் மகத்துவத்தால் பெரும்பாலான உயிரிழைப்பை தடுத்துநிறுத்தி இருக்கிறது. துளசி, மஞ்சள், வேப்பிலை, நொச்சி, ஆடுதொடாஇலை, இஞ்சி போன்றவையெல்லாம் என்றும் நமதானது அவைகளை சொந்தம்கொள்ள எண்ணிட கற்றுத்தரவேண்டும்.துரித உணவை உட்புகுத்தி துணைநிற்கும் உணவை மறைப்பதற்காகவே நமது நிலக்கடலையும் எள்ளையும் மறைத்து குர்க்குரே, லாலிபாப், லேஸ் போன்ற உடலுக்கு ஒவ்வாத பொருட்களை பகீரங்கமாக விற்பதில் கூட நமக்கு புரிதல் இல்லை என்பதையே காட்டுகிறது.

வேதியியல்கலப்பால் நிலமும் கருவுற்றுக்களிப்படைய இயலாத பெண்ணாக மாறிவருவதை மாணவர்களுக்கு உணர்த்தி நம்பிடவைக்கத் தவறிவிட்டோம். அதே வேளையில் இது நலமென்று நாலாவிதத்திலும் விளம்பரப்படுத்தி ஊக்கப்படுத்துவதும் நாளைய சீரழிவே! புத்தனை புத்தியில் ஏற்றினால் கட்டாந்தரை சுகமே காலத்தை வெல்லும் என்று உணர்வீர்!. பசியைவிற்றுத்தான் பெருமையை தேடிக்கொள்கிறான் மனிதன். உறக்கத்தை இரவுக்கு விற்றுவிட்டு கடனுக்கு காவல் இருக்கும் அவலங்களை பின்னால் வரும் பிள்ளைக்கும் பேரனுக்கும் மிச்சம்வைத்துவிடாமல் அச்சமின்றி வாழ அறைகூவல்விடுவது நமது எஃலோரின் கடமை.பழங்கஞ்சிச்சோறும் சின்னவெங்காயமும் ஆகச்சிறந்து உணவாக அன்மையில் அகிலமே ஒப்புக்கொள்ளும்படியாக நற்செய்தியை பதிவிட்டது உலகரங்கு.

உணவுகள் பலவந்து உடலைவாட்டுமென்று உணர்தல் அவசியம். தூய்மையென்றவற்றில் தூய்மையுண்டா...?

தூய்மையானதென உனது மனம் நம்பியதால் பாலித்தீன் பைக்குள் இடப்பட்ட ஏதோ ஒன்று உடலுக்கும் உயிர்மண்ணுக்கும் கேடென எண்ணுவதில் என்ன தவறு இருக்கமுடியும்? காற்றும் கரிபடர்ந்துதான் வீசுகிறது. நீரும் மாசுடனே கிடைக்கிறது. காரணம்தேடாமல் காலம்முடிந்துவிட்டால் பின்னால் வருபவருக்கு நோயையும் சாவையும் தான் மூட்டைக்கட்டி வைத்துசெல்வீர்கள்! இக்கால இளைஞனும் இளைஞியும் தவறினைப்புரிந்துகொள்வதில் சமமானவர்கள்.ஆனால் ஏன் எதற்கென்று எண்ணிப்பார்த்தால் எல்லா நலமும் எல்லாவளமும் நமதானதே!

ஆனால் தீர்வு அதுவல்லவே,மெளரவத்தைப்போர்த்திக்கொண்டுஉள்ளே எயிருக்கும் ஆணவத்தை வாழவைக்கிறார்கள் என்பதே நிதர்சனமான உண்மை.இவையெல்லாம் மெல்ல மெல்ல கழுவப்பட்டாலொழிய நம்மைத்தழுவிக்கொள்ளும் தவறுகளில் இருந்துதப்பித்துக்கொள்ளலாம். சரியான வழிகளில் இளையோரை திருத்தும்பொருட்டு கல்வித்துறையும் கண்கலங்கிநிற்க பெற்றோர்களின் அறியாமையால் பிள்ளைகளின் ஆசைகளை சரிதவறுகளோடு ஒப்பிடவியலாமல் கடினப்படுகிறார்கள், பாட்டனும் பாட்டியும் வைத்துசென்ற வயல்காட்டு சோற்றை தந்தையும் தாயும் உண்டுகளித்துவிட்டு எஞ்சியவற்றை எங்கும் விதைத்தார்கள், அது உமிகளை உதறித்தள்ளிவிட்டு அரிசியாய் அவமானப்பட்டது அடுத்த தலைமுறையினருக்கு. கால்நடைகளின் கரிசனம்பற்றி சிறிதும் உயிர்ப்பின்றி வளர்வதும் உணவுச்சங்கிலியின் உண்மைக்கு புறம்பானதே! விதைபரவும் வித்தையை மறந்து சதைவளர்க்கும் சந்தைப்பொருளை வாங்கிக்குவித்து பொருளாதார நட்டத்தை ஏற்படுத்தும் உற்பத்தியில்லா உறவுகளாய் மாறி நாளைய இளைய சமூதாயத்தின் நல்ல வாழ்வுக்கு வெற்றிடத்தை மட்டுமே விட்டுவைப்பவர்களாக மாறிவிடுவதற்குள் எல்லாவற்றையும் தயார் படுத்து.

**– வடலூர் ஜெகன், 8675825153**



# இதுதான் உலகமா!

மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ் புத்தகத்தில் எனக்கு பிடித்த கதை.. உங்களுக்கும் பிடிக்கும் .

கதையை பொறுமையாக படிக்கவும்.

ஒரு கிராமம். சிறுவன் ஒருவன் ஏரிக்கரையில் விளையாடிக் கொண்டு இருக்கிறான்.

அப்போது, "என்னை காப்பாற்று, காப்பாற்று" என்று ஓர் அலறல். ஆற்றோரத் தண்ணீரில், வலைக்குள் சிக்கி இருக்கும் முதலை ஒன்று சிறுவனைப் பார்த்துப் பரிதாபமாக கதறுகிறது.

'மாட்டேன். உன்னை விடுவித்தால் என்னை விழுங்கி விடுவாய். காப்பாற்ற மாட்டேன்' என மறுக்கிறான் சிறுவன்.

ஆனால் முதலை, "நான் உன்னை சத்தியமாகச் சாப்பிட மாட்டேன். என்னை காப்பாற்று" என்று கண்ணீர் விடுகிறது.

முதலையின் பேச்சை நம்பி, சிறுவனும் வலையை அறுக்க ஆரம்பிக்கிறான். அறுத்து முடிப்பதற்குள், சிறுவனின் காலைப் பிடித்துக் கொண்டது .

"பாவி முதலையே இது நியாயமா? என்று சிறுவன் கண்ணீருடன் கேட்க, "அதற்கென்ன செய்வது, பசி வந்தால் பத்தும் பறந்துவிடும். இதுதான் உலகம். இதுதான் வாழ்க்கை" என்று சொல்லிவிட்டு விழுங்க ஆரம்பித்தது முதலை.

சிறுவனுக்கு சாவது பற்றிக் கூட கவலை இல்லை. முதலை ஏமாற்றி விட்டதோடு மட்டும் அல்லாமல், நன்றி கெட்ட தனத்தை, 'இது தான் உலகம்' என்று சொல்வதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மரத்திலிருந்த பறவைகளைப் பார்த்துக் கேட்டான். இது தான் உலகமா?. அதற்கு பறவைகள், "எத்தனையோ பாதுகாப்பாக மரத்தின் உச்சியில் நாங்கள் முட்டை இடுகிறோம். ஆனாலும், பாம்புகள் முட்டைகளை குடித்து விடுகின்றன. அதனால், இது தான் உலகம்" என்றன.

அங்கு மேய்ந்து கொண்டு இருக்கும்

கழுதைகளைப் பார்த்து கேட்கின்றான். "நாங்கள் இளமையாக இருந்த காலத்தில் அதிகமான சுமைகளை சுமக்க செய்து, அடித்து, சக்கையாக வேலை வாங்குகிறார்கள். எங்களுக்கு வயதாகி, நடை தளர்ந்தவுடன், தீனி போட முடியாது என்று விரட்டி விடுவதால், முதலை சொல்வது சரிதான்" என்கின்றன.

ஆடுகளை கேட்கிறான். "எங்களுக்கு இரை போட்டு வளர்ப்பவர்களே, எங்களை இரையாக்கி கொள்வதால், முதலை சொல்வது சரி தான்" என ஆமோதிக்கின்றன.



கடைசியாக ஒரு முயலைப் பார்த்துக் கேட்கின்றான். "இதுவல்ல உலகம். முதலை பிதற்றுகிறது" என முயல் சொல்ல, முதலைக்கு கோபம் வந்து விடுகிறது.

'சிறு முயல் உனக்கு என்ன தெரியும்?' என்று முதலை சொல்லவும், 'நீ பேசுவது சரியாக புரியவில்லை, தெளிவாக பேசு' என்கிறது முயல்.

காலை விட்டால் "சிறுவன் ஓடி விடுவான் " என்றது. முயல் பெரிதாக சிரித்தது. உன் வாலை வைத்து அவனை அடித்து விட முடியாதா ? ஒரே அடியில் அவனை வீழ்த்தி விட முடியும் உன்னால் என்றவுடன், கர்வத்துடன் காலை விட்டு விட்டு, இது தான் உலகம் என பேச துவங்கியது முதலை.

முயல் சிறுவனைப் பார்த்து 'நிற்காதே! ஓடிவிடு' என்கிறது. சிறுவன் ஓடி விடுகிறான். வாலால் அடித்து விடலாம் என நினைத்த முதலைக்கு ஏமாற்றமாகி விடுகிறது, வலையில் சிக்கியிருக்கும் வால் பகுதியை விடுவிப்பதற்குள் சிறுவனை பிடித்தது நினைவுக்கு வருகிறது. கோபத்துடன் முயலைப் பார்க்க, "புரிந்ததா ? இது தான் உலகம். " என்கிறது முயல்.

தப்பி ஓடிய சிறுவன் கிராமத்தினரை அழைத்து வர, அவர்கள் முதலையை கொன்று விடுகின்றனர். சிறுவனோடு வந்த வளர்ப்பு நாய், புத்திசாலி முயலை பாய்ந்து பிடிக்கிறது. சிறுவன் காப்பாற்றுவதற்குள் முயலை நாய் கொன்று விடுகிறது.

உயிராக வளர்த்த நாய் தான் என்றாலும், உயிரைக் காப்பாற்றிய முயலை கொன்று விட்டதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

கல்லெடுத்து எறிந்து நாயை கொன்று விடுகிறான். உதவி செய்தவர்களுக்கு உபத்திரவம் ஏற்படுவதும், நேசித்தவர்களையே வெறுக்க நேரிடுவதும் அவனை குழப்பி விடுகிறது.

இதுதான் உலகமா?

இதுதான் வாழ்க்கையா? என்ற கேள்விக்கு பதில் சொல்வார் யாருமில்லை!.

முன்னுக்குப் பின் முரணாகவும் எதிரும் புதிருமான நிகழ்வுகள் தான் வாழ்க்கை!.

அடுத்த நொடிகளில் நடக்க இருப்பது அதிர்ச்சிகளா? ஆச்சரியங்களா? என அறிய முடியாமல் இருப்பது தான் வாழ்க்கையின் ரகசியம்..!!

வாழ்க்கையை புரிந்து கொள்ள முடியாது. புரிய வைக்கவும் முடியாது. (எதிர் வருவதை) எது நடந்தாலும் ஏற்றுக் கொண்டு, முன்னேற வேண்டும்....!!

**- சுமதி சிவக்குமார்**

# அச்சமூட்டும் உயிரினங்கள்! அறிந்து கொள்ள தயங்காதீர்!

## முனைவர். பா. ராம் மனோகர்



**பொ**துவாக நீரில் வாழும் தவளை, மெல்லுடலிகள், சிப்பி, போன்றவை நம்மால் விரும்பப்படாத உயிரினங்கள்!எனினும் அவை சுற்று சூழலில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவை நீரில் உள்ள புழு, நுண்ணிய உயிரினங்களை உண்டு நீர் சூழல் பாதுக்காக்கிறது . நத்தைகள் சளி, நுரையீரல் நோய்களுக்குமருந்துஎனநம்பிக்கை உள்ளது!இதன் முழுமையான சூழ்நிலை வாழ்வியல் எனது பட்ட படிப்பிலும், அதனை உடற்கூறு (DISSECTION) ஆய்வுகளும் மேற்கொண்டு வந்த நினைவுகள்இன்றும் உள்ளது.. ஆனால் முதுகெலு ம்பற்றவை (INVERTEBRATES) பல உயிரினங்கள், dissection நோக்கம் கொண்டு அழிந்து போக காரணம் ஆகி, கடந்த 15 ஆண்டுகளாக, DISSECTION OF ANIMALS,..அதாவது விலங்கு உடற் கூறு அறிதல் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் தடை செய்யப்பட்டுவிட்டது! உண்மையில் நன் நீர் வாழ்விடம் அழிவை நோக்கி செல்லும் நிலையில், இந்த நத்தைகள் மறைந்து நம் எதிர்கால தலைமுறை படத்தில் மட்டும் பார்க்கும் பரிதாப நாட்கள் நேரப்போவது வெகு தூரத்தில் இல்லை எனவே அவற்றைப்பற்றி இளம் தலைமுறை அறியவேண்டும்.




ஆம்! நண்பர்களே!பொதுவாக ஊர்வன (REPTILES)வகை விலங்குகள் என்றாலே, நமக்கு அச்சம்! ஏன்? 1. தோற்றம் 2. மாமிசம் உண்ணி 3. நச்சு தன்மை 4. பாரம்பரியமாக நம் மரபணுக்களில் பொதிந்த வெறுப்புணர்வு!அழகு பறவை ரசிக்கையில், பாம்பு, முதலை, பல்லி,







உடும்பு, ஓணான், அரணை, ஆமை போன்றவை நமது வெறுப்பு விலங்குகள் ஆகிவிட்டனவே!பரவாயில்லை!எனினும், இந்த விலங்குகளும் சுற்று சூழல் முக்கியத்துவம் வாய்ந்தது, தெரியுமா?! இவை சிறு பூச்சி, விவசாயஎதிரி எலி போன்ற கொரிக்கும் விலங்குகள் இன தொகையினை கட்டுப்பாடு செய்யும்!முதலைகள், மீன்களின் இனத்தை உணவாகக்கொண்டு, எண்ணிக்கையினை சமமாய் வைக்கிறது!

பொருளாதார ரீதியாக, இவற்றின் தோல் பயன்பாடு அதிகம்!பல்லிகள் வீட்டுக்கு பூச்சிகளை கட்டுப்பாடு செய்யும் நண்பன்! இனிமேல் ஊர்வன விலங்கு பற்றிய ஐயம் நீக்குங்க!பயந்தா, நீங்க விலகுங்க!அவற்றை கொல்லாதீங்க!

உண்மையில் இந்த விலங்குகள், குறித்து பல உண்மைகள் சாதாரண மக்கள் அறியாமல் உள்ளார்கள். இவற்றை பற்றிய அச்சங்கள் அதிகம்!ஆனாலும் பல இடங்களில் பாம்புகள் மனிதன், மோதல் இல்லாமல், அவற்றை பிடிக்கும் இளைஞர்கள் உள்ளனர். அவற்றை மீண்டும் இயற்கை சூழலில் விடுவிக்கின்றனர்.



# மருத்துவ குணங்கள் கொண்ட மாசிக்காய்

பல்லாயிரக்கணக்கான உயிர்காக்கும் மூலிகைகள் எத்தனையோ வகையான மூலிகைகளை நமது முன்னோர்கள் வாழ்வில் அவ்வப்போது பயன்படுத்தி வந்தார்கள். அந்த வகையில் பல அற்புதமான மருத்துவ குணங்களை கொண்ட மாசிக்காய் மரத்தின் பிசினிலிருந்து வரும் ஒரு மூலிகை தான் மாசிக்காய். இந்த மாசிக்காய் மூலிகையை பல்வேறு பக்குவத்தில் பயன்படுத்தும் போது ஏற்படும் நன்மைகளை இங்கு காண்போம்!

பெண்களுக்கே உண்டான ஒரு இயற்கை வரம் தாய்மை ஆகும் பெண்களுக்கு மாதந்தோறும் வெளியேறும் மாதவிடாய் சம்பந்தமான பிரச்சனைகள் பல பெண்களுக்கு அவர்கள் இந்த மாசிக்காய் பொடியை தேன் அல்லது நெய்யில் கலந்து சாப்பிட்டு வர மாதவிடாய் காலத்தில் அதிக ரத்த போக்கு ஏற்படுவது நிற்கும். கருப்பையில் இருக்கும் அழுக்குகள், நச்சுக்கள் நீங்கும். கருப்பை பலம் பெறும்.

மாசிக்காய் பொடியை நீர்விட்டு நன்கு குழைத்து ஆசனவாயில் மூலம் பாதிப்பால் ஏற்பட்ட புண்கள், கட்டிகள் போன்றவற்றின் மீது தடவி வர சிறந்த நிவாரணம் அளிக்கும். தேமல், படை, சொறி, சிரங்கு போன்றவற்றின் மீதும் மாசிக்காய் பொடியை தினமும் நீரில் குழைத்து தினமும் தடவி வர நல்ல குணம் கிடைக்கும்.

கெட்டு போன உணவுகளை உண்பதாலும், சீதோஷண நிலை மாறுவதாலும் சிலருக்கு வயிற்று போக்கு ஏற்பட்டு அவதியுறுவர். இப்படிப்பட்டவர்கள் மாசிக்காய் பொடியை ஒரு சிட்டிகை அளவு



எடுத்து அதை தேனில் கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் வயிற்று போக்கு குணமாகும். குழந்தைகளுக்கு ஏற்பட்டும் வயிற்று போக்கு பிரச்சனைக்கும் இது சிறந்த தீர்வாகும்.

நமது அன்றாட வாழ்க்கையில் சில சமயம் எதிர்பாராத விதமாக நமக்கு அடிபடுகிறது. சமயங்களில் ரத்த காயம் கூட அடிபட்ட காயத்தில் ரத்தம் அதிகம் வெளியேறுவதை தடுக்க, மாசிக்காய்கள் சிலவற்றை நெருப்பில் சுட்டு, அந்த சாம்பலை ரத்த காயத்தின் மீது வைத்து அழுத்த, ரத்தம் வெளியேறுவது நிற்கும்.

போதைப்பொருட்கள், வேறு சில ரசாயனங்களும் விஷ தன்மை கொண்டவை. இதை உண்டவர்கள் உடலில் இருக்கும் இந்த நச்சை நீக்குவதற்கு மாசிக்காய் தூளை 5 கிராம் அளவில் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுத்து வந்தால் அபின், கஞ்சா, மது, மயில் துத்தம், மர உப்பு போன்ற பொருட்களின் நஞ்சை முறிக்கும்.

குளிர்காலங்களில் பெரும்பாலானவர் களுக்கு ஜலதோஷம் ஏற்படுகிறது. மேலும் டான்சில்ஸ், இருமல், தொண்டைக்கட்டு மற்றும் தொண்டை வலி போன்ற பிரச்சனைகள் நமது சுவாசப்பாதைகளில்





பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. மாசிக்காய் பொடியை, கற்பூரவள்ளி இலை சாற்றுடன் கலந்து சாப்பிட இப்பிரச்னைகளிலிருந்து சிறந்த நிவாரணம் கிடைக்கும்.

இன்றைய காலத்தில் மனஅழுத்தம் மற்றும் உடலில் ஏற்படும் சில குறைபாடுகள் பல ஆண்களுக்கு ஆண்மை குறைபாடு பிரச்சனைகள் ஏற்படுகின்றனமாசிக்காய், ஜாதிகாய், ஆவாரம் பசை, ஏலக்காய் இவற்றை எல்லாம் நன்கு பொடித்து இதனுடன் வல்லாரை இலைப்பொடியை சேர்த்து, நெய்யில் வதக்கி சாப்பிட நரம்புகள் வலுப்பெற்று ஆண்மை குறைபாடுகள் நமக்கு இளமையான தோற்றம் தருவதில் நமது சருமம் முக்கிய பங்கு வகிக்கிறது. தோலில் சுருக்கங்கள் ஏற்படுவதை தடுக்கவும், இளமை தோற்றம் பெறவும் மாசிக்காய், ஜாதிக்காய் மற்றும் கிராம்பு ஆகியவற்றின் பொடிகளை ஒன்றாக கலந்து உடலுக்கு பூசி குளித்து வர மேற்கூறிய பலன்கள் கிடைக்கிறது.

நாம் உணவை உண்பதற்கு வாய், நாக்கு, பற்கள் போன்ற உறுப்புக்கள் உதவி புரிகின்றன. மாசிக்காய் பொடியை குடிநீரில் கலந்து வாய்கொப்பளித்து வர நாக்கில் இருக்கும் புண்கள் ஆறும். ஈறுகள் உறுதிபெறும். ஈறுகளில் ரத்தம் வடிவது நிற்கும். பற்சொத்தை மற்றும் உஷ்ணம் காரணமாக வாயில் ஏற்படும் புண்கள் குணமாகும்.

**- பெரு. சங்கர், ஈரோடு**

# வெஜ் ஸ்டிக்ஸ் -Veg Sticks



**தேவையான பொருட்கள் :** ரவை -1 கப், உருளைக்கிழங்கு - 1/4 கிலோ, பச்சை மிளகாய் - 3, மிளகு தூள் -1 ஸ்பூன், சீரக தூள் - ஸ்பூன், மிளகாய் தூள் - ஸ்பூன், உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - பொரிக்க தேவையான அளவு, கொத்தமல்லி சிறிதளவு, துருவிய கேரட் - 1 கப், பிரட் க்ரம்ஸ் - தேவையான அளவு.

**செய்முறை :** கொதிக்க வைத்த தண்ணீர் 1 டம்ளர் எடுத்து ரவையில் ஊற்றிக் கொள்ளவும் அதனுடன் 1 ஸ்பூன் எண்ணெய் சேர்த்துக் கொள்ளவும் 10 நிமிடம் ஊறவைக்கவும்.

உருளைக்கிழங்கை வேகவைத்து மசித்து





வைத்துக் கொள்ளவும் அதில் துருவிய கேரட், மிளகு தூள் 1 ஸ்பூன் , மிளகாய் தூள் 1 ஸ்பூன், நறுக்கிய பச்சை மிளகாய், சீரக தூள் 1 ஸ்பூன், கொத்தமல்லி சிறிதளவு , உப்பு தேவையான அளவு, சேர்த்து ஒன்றாக கலந்து வைத்துக் கொள்ளவும். ஊறவைத்த ரவையை இதனுடன் சேர்த்து ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும். கையில் எண்ணெய் தடவிக் கொண்டு இதை உருண்டைகளாகப் பிடித்து நீளவாக்கில் உருட்டிக் கொள்ளவும். பிறகு உருட்டி வைத்ததை பிரட் க்ரம்ஸில் டிப் செய்து கொள்ளவும்.

பிறகு அடுப்பில் ஒரு வாணலியை வைத்து எண்ணெய் சேர்த்துக் கொள்ளவும்.



S. கவிதா,
சிட்லபாக்கம்

பிறகு நாம் உருட்டி வைத்துள்ள வெஜ் ஸ்டிக்ஸ் எடுத்து எண்ணெயில் போட்டு பொரித்து எடுத்துக் கொள்ளவும். இப்பொழுது மிகவும் சூப்பரான அட்டகாசமான சூடான வெஜ் ஸ்டிக்ஸ் தயார். இதனுடன் Tomato sauce சேர்த்து பரிமாறவும்.

# நுரையீரல் கோளாறுகளை நீக்கும் தேன்





**தேவையான பொருட்கள்:**

*தூதுவளை - 100 கிராம்*

*துளசி - 100 கிராம்*

*முசுமுசுக்கை - 100 கிராம்*

*கண்டங்கத்திரி - 100 கிராம்*

ஆகிய நான்கையும் காயவைத்து எடுத்துக்கொள்ளவும். இத்துடன்

*சுக்கு - 10 கிராம்*

*மிளகு - 10 கிராம்*

*திப்பிலி - 10 கிராம்*

*அதிமதுரம் - 10 கிராம்*

*ஜாதிக்காய் - 10 கிராம்*

*மாசிக்காய் - 10 கிராம்*

*ஜாதிப்பத்திரி - 10 கிராம்*

*ஏலக்காய் - 10 கிராம்*

*கருஞ்சீரகம் - 10 கிராம்*

*அக்ரகாரம் - 10 கிராம்*

*கடுக்காய் - 10 கிராம்*

ஆகியவற்றை எடுத்து, அனைத்தையும் ஒன்றாகக் கலந்து தூள் செய்து கொள்ளவும். இதில் இரண்டு கிராம் அளவு பொடியை எடுத்து, தேனில் குழைந்து தினம் காலை, இரவு இருவேளை உணக்குப்பின் சாப்பிட்டு வர, ஆஸ்துமா, மூச்சுத் திணறல், நுரையீரல் கோளாறுகள் போன்ற அனைத்தும் தீரும்.

***ஓ.சோ.மா, இயற்கை தேன் பண்ணை***




# எம் பதில்கள்



**பொதுவெளியில் முக்கிய பிரமுகர்கள் டென்ஷன் ஆகிறார்களே!**

சமீபகாலமாக திரைத்துறைப் பிரபலங்களான இளையராஜா, பாக்யராஜ்,கங்கை அமரன் ,பார்த்திபன் ஆகியோர் பொதுவெளியில் பேசியதும்,நடந்து கொண்டதும் இணையதளங்களில் பார்க்கமுடிந்தது. சில வருடங்களுக்கு முன்னால் ஒரு நிருபரை பார்த்து உனக்கு அறிவிருக்கா உனக்கு அறிவு இருக்கா என்று இளையராஜா கேட்பதை நாம் பார்த்தோம். அதைப்போல பேட்டி ஒன்றில் அவரது தம்பி கங்கை அமரன் நிருபரை பார்த்து ஏக வசனங்களில் கோபாவேசமாக பேசி கரகாட்டம் ஆடியதை பார்க்க முடிந்தது. விழா ஒன்றில் பேசிய பாக்யராஜ் மோடியை எதிர்ப்பவர்கள் குறைப்பிரசவத்தில் பிறந்த வர்கள் என்று சொல்லி அது சர்ச்சையாக அதற்காகவே பாக்யராஜ் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். அதைப்போல பொதுவெளியில் மைக்கை தூக்கி அடித்ததற்காக நடிகர் பார்த்திபன் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். ஆனால் இளையராஜா, கங்கை அமரன் இருவரும் தங்களுடைய நடவடிக்கைக்காக வருந்தியதாகத் தெரியவில்லை. மாறாத தங்களுக்கு எல்லாம் தெரியும் தாங்கள் பெரிய மேதாவிகள் என்ற அந்த எண்ணத்தை தங்களுக்குள் வைத்துக் கொண்டு இப்படிப் பேசுகிறார்கள். அதிலும் கங்கை அமரன் பாஜகவில் இருப்பதால் தன்னை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது என்கிற எண்ணத்தில் நடந்து கொள்கிறார். பொதுவாக மக்களால் கொண்டாடப்படும் அவர்கள் அந்த மக்களிடம் பொதுவெளியில் மரியாதையோடு நடந்துகொண்டால் மட்டுமே அவர்களுக்கான மரியாதை தொடரும் . மேலும் எந்த ரசிகர்கள் தூக்கி வைத்துக் கொண்டாடினார்களோ அவர்களே இந்த செயல்களால் வெறுத்துப் போவார்கள்.

**ஆதீனங்கள் சர்ச்சை தொடர்கிறதே?**

லேட்டஸ்ட் விஷயம் பட்டிணப் பிரவேசம்தான். மயிலாடுதுறை மாவட்டத்தில் தருமபுரம் ஆதீன மடம் செயல்பட்டு வருகிறது. பழமையான சைவ ஆதீனமாக விளங்கும் அந்த ஆதீனத்தின் ஆதீனகர்த்தராக இருந்த ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கடந்த 2019ஆம் ஆண்டு டிசம்பர் 4 ம் தேதி காலமானார்.அதனை தொடர்ந்து ஆதீனத்தின் 27 வது ஆதீனகர்த்தராக ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி



தேசிகர் ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அதே ஆண்டு டிசம்பர் 13 ம் ஆதீனகர்த்தராக பதவியேற்று ஞானபீடத்தில் அமர்ந்தார். அன்றைய தினமே தருமபுரத்தில் ஏற்பாடு மனிதனை மனிதர்களே தூக்கும் பட்டி பிரவேச நிகழச்சி நடந்தது, வெள்ளிப் பல்லக்கில் புதிய ஆதீனகர்த்தர் அமரந்து வீதி உலாவந்தார். அந்த பல்லக்கை அதற்காக ஆதீனத்தில் உள்ள அடிதட்டு மக்கள் சுமந்து வந்தார்கள். ஆதீனத்தை பல்லக்கில் தூக்கி செல்வதற்கு திராவிடர் கழகம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

மனிதனை மனிதனே சுமப்பது மனித உரிமைக்கு எதிரானது என்று திராவிடர் கழகம் கூறி எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்த வாய்ப்பு உள்ளது என்பதாலும் இந்த நிலையில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்பதாலும் தருமபுரம் ஆதீனம் குருமகாசன்னிதானத்தை பல்லக்கில் அமர வைத்து தூக்கி செல்வதற்கு தடை விதித்து மயிலாடுதுறை கோட்டாட்சியர் பாலாஜி உத்தரவிட்டுள்ளார். இந்தப் பிரச்சினையை பாஜக உள்ளிட்ட இந்து அமைப்புகள் கையிலெடுத்துக் கொண்டு அதற்காக போராட்டம் நடத்தி வருகின்றனர். முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இதெல்லாம் தவறு இல்லை அது பாரம்பரியமாக நடந்து செல்வதை தடை செய்யக்கூடாது என்று தெரிவித்தார் இந்த பரபரப்பான சூழலில் முதல்வர் என்ன முடிவெடுக்கப் போகிறார் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்

### பெயர் வைப்பது கூட பிரச்னையாகிறதே?

கடந்த வாரம் தமிழக அரசின் சார்பில் ஒரு தெருவுக்கு சின்னக் கலைவானர் விவேக் என்று பெயரும், ஈசிஆர் ரோடு கலைஞர் கருணாநிதி சாலை என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது அதற்கான அறிவிப்பு விழா ஆகியவை அரசின் சார்பில் நடத்தப்பட்டது. நடிகர் விவேக் அவர்களின் பெயரை அவர் வாழ்ந்த பத்மாவதி நகர் தெருவுக்கு வைக்க வேண்டுமென்று முதலமைச்சரிடம் நடிகர் விவேக் மனைவி தனது மகள் மற்றும் விவேக்கின் திரைத்துறை நண்பர் செல் முருகன் ஆகியோருடன் சென்று கோரிக்கை வைத்தார். கோரிக்கை வைத்த சில நாட்களிலேயே அது ஏற்கப்பட்டு உடனடியாக விவேக் வாழ்ந்த தெருவுக்கு அவர் பெயர் சூட்டும் விழா நடைபெற்றது.





பலராலும் பாராட்டப்பட்டது என்றாலும் திமுகவின் நீண்டநாள் கட்சிக்காரர்கள் மத்தியில் இது ஒரு மன சங்கடத்தை ஏற்படுத்தி விட்டது ஏனென்றால் நடிகர் குமரிமுத்து என்பவர் அந்தக் கட்சியின் பேச்சாளராக அவர் இறக்கும் வரையில் சுற்றிச்சுற்றி வந்து பேசி கட்சிக்கு பலம் சேர்த்தார். ஆனால் விவேக் எந்த கட்சி ஆட்சிக்கு வருகிறதோ அந்தக் கட்சிக்கு சார்பாகவே நடந்துகொண்டார். எனவே விவேக் பெயர் வைப்பதற்கு முன்பாக குமரிமுத்துவை பெயரையும் அவர் வாழ்ந்த தெருவுக்கு வைத்திருக்க வேண்டும் என்று ஆதங்கப்படுகிறார்கள். அதைப்போலவே ஈ.சி.ஆர் ரோடுக்கு கலைஞர் பெயர் வைத்தது குறித்து அதிமுகவினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அதற்கு அமைச்சர்கள் அன்றைக்கு ஜெயலலிதா பெயரை அம்மா உப்பு, அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட், அம்மா மலிவு விலை காய்கறி அங்காடி, அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம் என்று எல்லாத்துக்கும் பெயர் வைத்தீர்களே என்று எதிர் கேள்வி கேட்கிறார்கள்.





# ஹெட்போன் பயன்படுத்துகிறீர்களா? கவனம்!

**ந**மது காதுகளால் 65 டெசிபெல் வரை ஒரு ஒலியை தாங்க முடிகிறது , ஆனால் நாம் பயன்படுத்தும் ஹெட் போனின் ஒலி குறைந்தது 100 டெசிபெல் ஆகும் .




அதாவது 100 டெசிபெல் தொடர்ச்சியாக 10 மணி நேரத்திற்கு மேல் நாம் ஹெட் போனில் ஒலியை கேட்டால் , நாம் காது கேளாத நிலையை அடைந்துவிடும் . நாம் ஹெட்போன் பயன்படுத்துவதினால் நம் காதுகளில் உள்ள செல்களின் மீது மிகவும் தவறான தாக்கத்தை எதிர்கொள்கிறோம். ஹெட்போனை தொடர்ந்து நாம் உபயோகிப்பதால் நம் காதுகளில் உள்ள செல்கள் சிதைகின்றன. ஹெட்போன் பயன்படுத்து வதினால் தலைவலி, தூக்கமின்மை மற்றும் மன அழுத்தம் போன்றவற்றினாலும் நாம் பாதிப்படைகின்றோம் ,



நீங்கள் இது போன்ற பிரச்சனை களை சந்திக்கிறீர்கள் என்றால் ஹெட்போன்பயன்பாட்டை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

தகவல்:**எஸ்.ஜானகி**



# காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை!

**30** வயதிற்கு மேல் கட்டாயம் திருமணம் முடித்திருக்க வேண்டும், தாய் தந்தையின் உதவியை நாடியோ அல்லது மனைவி, உடன் பிறந்தோர், சொந்தக்காரர், போன்ற யாரிடமும் உங்கள் சொந்த செலவிற்காக நிற்க கூடாது, உங்களுக்கு என ஒரு வருமானம் தரும் தொழில், வேலையோ கட்டாயம் இருக்கவேண்டும், 30 வயதிற்கு மேல் நிலையான வருமானம் வேலையும் இல்லையென்றால் நீங்கள் திருமணம் செய்துகொள்ளாதீர்கள், அது உங்களை மேலும் துன்பப்படச்செய்யும்...

பணம் எப்போது வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம், ஆனால் வயசு போனால் திரும்ப வராது, கூடவே மகிழ்ச்சியும் போய்விடும், 40 வயதிற்குள் உலகம் வேண்டாம், நம்ம இந்தியாவிற்குள்... நீங்கள் சுற்றுலா மேற்கொள்ள வேண்டும், மனைவி மக்களுடன் சென்றால் இன்னும் ஆனந்தமே... புது புது இடம், இனம், மக்கள், மொழி, என புதிய கலாச்சாரம் உங்களை ஆச்சரியப்பட செய்யும், இவ்வுலகில் இப்படிப்பட்ட மனிதர்களும் வாழ்கிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்...

ஆரம்பத்தில், வேலை வேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்திருக்கலாம். ஆனால், 40 வயதுக்குள்ளாவது உங்களுக்கு பிடித்த துறை / தொழில் / வேலையில் சேர்ந்துவிட வேண்டும், இங்கே யாருதான் பிடித்த வேலையை செய்கிறார்கள் என்கிறீர்களா? நாம் செய்யும் வேலையில் ஒரு நேர்மை, ஒரு நியாயம், இருக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்...

தோல்வியில் கற்காத பாடத்தை நீங்கள், வேறு எங்கும் கற்க முடியாது. தோல்வி உங்களை ஒழுங்குப்படுத்தும் ஆசான். ஓர் தோல்வியையாவது நீங்கள் சந்தித்துவிட வேண்டும். இல்லையேல், 30 வயதை கடந்த வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை கையாள அனுபவமின்றி தவிக்கும் நிலை ஏற்படலாம்...

சம்பாதிக்கும் பணத்தில் ஒரு சிறிய தொகையை கொண்டு கூட வருமானம் ஈட்டும் வகையில் எதிலாவது முதலீடு செய்து வைத்துவிட வேண்டும், அல்லது யாருக்கும் தெரியாமல் வங்கியில் சேர்த்து வைப்பதும், நல்லது நீங்கள் பணம் சேமிக்கிறீர்கள் என்று உங்கள் குடும்பத்தினருக்கு தெரிந்தால் அதற்கு என ஏதாவது புதிதாக முளைக்கும் அதனால்தான் வருமானத்தின் கால் பங்கை சேமித்து வைப்பின்... அதை

செலவு செய்யாமல், வருங்காலத்திற்கு உதவிடும்...

30 வயதிற்குள் நேர்மையான மற்றும் உண்மையான நட்பை தக்க வைத்துக்கொள்ளுங்க,

எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும், எவ்வளவு பெரிய வெற்றி வந்தாலும், உங்கள் அருகில் உங்களுக்கு தோள் கொடுக்க ஒரு தோழமை வேண்டும், 40 வயது வரை உங்களுக்கு நண்பர்களே இல்லையென்றால் உங்கள் குடும்பத்தினரை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளுங்கள் வேற வழியே இல்லை...

ஓர் நபருடன் பழகுவது பிடிக்கவில்லையா, உங்கள் சுற்றதிற்காகவும், அலுவலக நண்பர்களுக்காகவும் விட்டுக் கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்களா? வேண்டவே வேண்டாம். முற்றிலுமாக பிரிந்துவிடுங்கள். உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு நல்லது நினைக்கும் நபர்களை மட்டும் சேர்த்துக் கொண்டு இனி நீங்கள் பயணம் செய்வது தான் நல்லது.

பெரும்பாலும் 30 வயதை கடக்கும் போது, சிலர் திருமணம் ஆகியும், சிலர் குழந்தை குட்டி என இருப்பார்கள். எனவே, அடுத்த தலைமுறைக்கான சேமிப்பை அளவிற்கு குறையாமல் எடுத்து வைக்க வேண்டும். இது உங்களுடைய கடமை.







நீங்கள் செய்யும் பணியில் நீங்கள் கைதேர்ந்தவர் என்ற நற்பெயருடன் விளங்க வேண்டும். அட, அவரு கிட்ட இந்த வேலைய கொடுங்க, சரியா செய்வார் என நால்வர் கூற வேண்டும், அதில்தான் உங்களின் (கெத்து) மதிப்பு அடங்கியிருக்கிறது...

நீங்கள் நீங்களாகவே இருங்கள்! 30 வயது வரை எப்படி இருந்தீரோ! 40 வயதிலும் அப்படியே இரும்... இந்த சமூகம் உங்களை நன்கு கவனிக்க கூடியது, மற்றவர்களுக்காக, அல்லது பணத்திற்காக உங்களை நீங்கள் மாற்றிக்கொண்டால், இருக்கும் மரியாதையும் போகுமே தவிர உங்களுக்காக யாரும் சிலை வைக்க போவதில்லை, ஆதலால் நீங்கள் நீங்களாகவே இருங்கள்.

"நிச்சயமாக துன்பத்தில்தான் இன்பம் இருக்கிறது, பிரச்சினையையும், துன்பமும் உங்களுக்கு மட்டுமல்ல... மேற்கூறிய யாவும் 30 வயதிலிருந்து 40 வயதிற்குள் நீங்கள் செய்து முடிக்க வேண்டிய உங்கள் வாழ்க்கையின் கட்டாயமாகும், பணம் மட்டுமே சந்தோஷத்தை ஒருநாளும் கொடுக்காது, பணத்தால் கிடைக்கும் சந்தோஷம் நீண்ட நாளும் நிலைக்காது, நாம் செய்யும் செயலும், நமது குடும்பமும், சுற்றும் சுற்றியுள்ள நட்பும், ஆகச்சிறந்த நமக்கு வேண்டிய மகிழ்ச்சியை இவைகளும் கொடுக்கும்."...


**-கவிஞர் சுகந்தீனா**

# HEALTH CARE TIPS



The STOMACH is injured when you do not have breakfast in the morning.

The KIDNEYS are injured when you do not even drink 10 glasses of water in 24 hours.





GALLBLADDR is injured when you do not even sleep until 11o'clock and do not wake up to the sunrise.

The SMALL INTESTINE is injured when you eat cold and stale food.






The LARGE INTESTINES are injured when you eat more fried and spicy food.



The LUNGS are injured when you breathe in smoke and stay in polluted environment of cigarettes.


The LIVER is injured when you eat heavy fried food, junk, and fast food





The HEART is injured when you eat your meal with more salt and cholesterol.

The PANCREAS is injured when you eat sweet things because they are tasty and freely available



The Eyes are injured when you work in the light of mobile phone and computer screen in the dark.
The Brain is injured when you start thinking negative thoughts.

The SOUL gets injured when you don't have family and friends to care and share with you in life their love, affection, happiness, sorrow and joy.

## EFFECTS OF WATER

We Know Water is important but never knew about the Special Times one has to drink it.. !!

Drinking Water at the Right Time Maximizes its effectiveness on the Human Body;1 Glass of Water after waking up - helps to activate internal organs..

1 Glass of Water 30 Minutes before a Meal - helps digestion.

1 Glass of Water before taking a Bath -helps lower your blood pressure.

1 Glass of Water before going to Bed - avoids Stroke or Heart Attack.






1. Prayer is not a "spare wheel" that you pull out when in trouble, but it is a "steering wheel" that directs the right path throughout the journey.

2. So why is a car's WINDSHIELD so large and the Rear View Mirror so small? Because our PAST is not as important as our FUTURE. So, Look Ahead and Move on.

3. Friendship is like a BOOK. It takes a few minutes to burn, but it takes years to write.

4. All things in life are temporary. If they're going well, enjoy them... they will not last forever. If they're going wrong, don't worry... they can't last long either.

5. Old Friends are Gold! New Friends are Diamond! If you get a Diamond, don't forget the Gold! Because to hold a Diamond, you always need a Base of Gold!

6. Often when we lose hope and think this is the end, GOD smiles from above and says, "Relax, friend, it's just a bend, not the end!"

7. When GOD solves your problems, you have faith in HIS abilities; when GOD doesn't solve your problems HE has faith in your abilities.

8. A blind person asked GOD: "Can there be anything worse than losing eye sight?" He replied, "Yes, losing your vision!"

9. When you pray for others, God listens to you and blesses them, and sometimes, when you are safe and happy, remember that someone has prayed for you.

10. WORRYING does not take away tomorrow's TROUBLES... it takes away today's PEACE.

தொடர் 5

நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

# தமிழ் பத்திரிகைகளும், தமிழ் வளர்ச்சித் துறையும்!

துடுப்பதி ரகுநாதன்

ஒரு மாநிலத்தில் சட்ட மன்றத்தில் மானிய கோரிக்கை தொடர்பான விவாதம் நடக்கும் பொழுது, அந்த அந்த துறை தொடர்பான மக்கள் பிரச்னைகள் அலசப் படும்!

மறு நாள் பத்திரிகைகள் அந்த செய்துகளை விரிவாகப் போடுவார்கள். நம் தேர்ந்த்டுத்த பிரதி நிதிகள் அந்த நேரத்தில் சட்ட மன்றத்தில் எவ்வாற் செயல் படுகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள மறு நாள் ஆவலோடு பத்திரிகைகளை பொது மக்கள் படிப்பது வழக்கம் தான்!

தமிழ் நாடு சட்ட மன்றத்தில் தமிழ் வளர்ச்சித் துறை மானிய கோரிக்கை தொடர்பான விவாதம் நடைபெறப் போவதாக அன்றைய பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன்.

மறு நாள் நமது அரசும், அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்களும் அந்த விவாதத்தில் எப்படி செயல் பட்டார்கள், நமது அரசு எதிர்காலத்தில் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ள ஆர்வத்தோடு பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தேன்!

எந்த தமிழ் பத்திரிகைகளிலும் அந்த மான்யம் விவாதம் தொடர்பான செய்திகள் இல்லை. தினமணி பத்திரிகையில் அந்தத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் புதிய கலைச் சொல் அகராதிகள் உருவாக்கப் படும், கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் மேல் ஆர்வம் வளர சில போட்டிகள் நடத்தப் படும்என்றும், ஊடகங்களில் தமிழில் சரியாக உச்சரிப்பவர்களுக்கு விருதுகள் வழங்கப் படும் என்று சொன்னதாக ஒரு செய்தி மட்டும் கண்ணில் பட்டது!

மற்றபடி எல்லா தமிழ் பத்திரிகைகளும் தமிழ் வளர்ச்சித் துறை மானிய கோரிக்கை தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்தும் தரவில்லை என்பது மிகவும் வேதனையாக இருக்கிறது !

ஒரு மாநிலத்தில் பல்வேறு கட்சிகள் இருக்கும் பொழுது அவைகள் தாங்களும் இருக்கிறோம் என்று மக்களுக்கு காட்டிக் கொள்ளதினசரி பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்ததிக் கொண்டுதானிருப்பார்கள்! அதை யாராலும் தடுக்க முடியாது!

அப்படி நடக்கும் சாதாரண விஷயங்களை பெரிது படுத்தி பரபரப்பை ஏற்படுத்துவது தான் தமிழ் பத்திரிகைகளின் கடமை என்றே நம் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு வருவது வேதனை அளிக்கின்றன!

ஒரு அரசியல் வாதி உதாரணத்திற்கு எருமை கூட கறுப்பு என்று சொன்னாராம்! அப்படி உதாரணம் காட்டிப் பேசியதால் ஒரு இனமே அழிந்து போனதைப் போல இன்னொரு அரசியல்வாதி அனல் கக்க பேசுவதை விபரமாக போட்டிருக்கிறார்கள்!

மாநில கவர்னர் தமிழ் மக்களுக்கு எதிராக செயல் படுகிறார் என்று சில கட்சியினர் அவர் தங்கள் ஊருக்கு வரும் பொழுது, எதிர்ப்பு தெரிவிக்க சுமார் 100 பேர கறுப்பு கொடியை காட்ட அவர் வரும் வழியில் நின்றிருக்கிறார்கள்

அதை பூதாகாரமாக்கி தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துப் போய் விட்டது! உடனே மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் ஒரு பொறுப்புள்ள அரசியல்வாதி பேசியிருக்கிறார்! அதை பெரிது படுத்தி தமிழ் பத்திரிகைகளும் போட்டிருக்கின்றன!

மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநில அரசை கலைக்க வேண்டிய அளவுக்கு தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் பட்டு விட்டதா என்று எனக்கும் கவலையாகப் போய் விட்டது! அங்கு என்ன நடந்தது என்ன தெரிந்து கொள்ள பத்திரிகைகளை தேடினேன்.



மாநில கவர்னருக்கு பாது காப்பு கொடுத்த உயர் போலீஸ் அதிகாரி ஐ.ஜி. அறிக்கை சிறிய அளவில் போட்டிருந்தார்கள்!

அவர் தலைமையில் ஆறு எஸ்.பி.க்கள். 1200 காவலர்கள் அந்த சிறிய ஊரில் வழி நெடுக நின்று கவர்னருக்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள்.

கவர்னரும், அவரோடு வந்த பரிவாரங்களும் போன பிறகு எதிர்ப்பு தெரிவிக்க முடியாத நமதுமாநிலத்தில் செயல் படும் சில சிறிய கட்சிகளைச் சேர்ந்த சுமார் 100 பேர்கள் அவர்கள் கைகளில் இருந்த கறுப்பு கொடிகளை தங்கள் கார்கள், வேன்களின் மேல் கோஷம் போட்டபடி வீசியதாகவும், உடனே அவர்களை கைது செய்து உரிய செக்சனில் வழக்கு போட்டிருப்பதாகவும் தெளிவான அறிக்கை கொடுத்திருக்கிறார்.

ஒரு சிறிய கிராமத்தில் இரண்டு குடும்பங்களை சேர்ந்தவர்களில் யாராவது ஒருவர் மற்ற வர் குடிசைக்கு தீ வைத்து விட்டால் கூட, தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதாகவும், உடனே ஆட்சியை கலையுங்கள் என்று மத்திய அரசுக்கு செல்வாக்கு உள்ள அரசியல் தலைவர் கோரிக்கை வைப்பார்!

இது பரபரப்புக்காக அராஜகம் என்று இது போன்ற செய்திகளை கொட்டை எழுத்துகளில் போட்டு பொது மக்களுக்கு தவறான எண்ணத்தை ஊட்டுவது பத்திரிகை தர்மமும் அல்ல! கடமையும் அல்ல!

நம் மாநில கவர்னர் அவர்கள் தர்மபுரம் ஆதீனம் அவர்களோடு கலந்து கொண்ட நிகழ்ச்சியில் தமிழ் நாட்டில் இதுவரை எந்த அரசியல் தலைவரும் சொல்லாத நம்மை சிந்திக்க வைக்கும்படி அற்புதமாக பேசியிருக்கிறார்!

அந்த அற்புதமான பேச்சை திரும்பத் திரும்ப படித்துப் பார்த்தேன்.

அதில் இந்திய பிரதமருக்கும் ஒரு கோரிக்கையும், தமிழ் நாடு முதல்வருக்கும் ஒரு கோரிக்கையும் இருப்பதாக எனக்குப் படுகிறது! இரண்டுமே மிக மிக முக்கியமானவை!

தமிழ் நாட்டில் பல ஊர்களில் 100 டிகிரியையும் தாண்டி சூரியன் கொளுத்துகிறான். மக்கள் வெயிலின் கொடுமை தாளது மிகவும் கஷ்டப் படுகிறார்கள்!

தமிழ் நாட்டில் ரவி என்ற ஒரு சூரியன், தி.மு.க. கட்சி என்ற மற்றொரு உதயசூரியன் என்று இரண்டு சூரியன்கள் தற்பொழுது இருப்பதாக ஆதீனம் அவர்கள் சொல்லியிருக்கிறார்!

இரண்டு சூரியன்களை மனிதர்கள் சமாளிப்பது கஷ்டம். இந்த தொல்லையால் தமிழ் நாட்டு மக்கள் கொஞ்ச காலமாக இந்திய பிரதமர் கவனமாக பரிசீலித்து சட்டப்படி நியாய தர்மப் படி தமிழ் நாட்டில் ஒரு சூரியன் மட்டுமே போதும் என்ற நிலையை உருவாக்க வேண்டும்!



இரண்டு சூரியனின் வெப்பக் கொடுமையை தமிழ் மக்கள் அனுபவித்துத் தான் தீர வேண்டும் என்று பிரதமர் நினைத்து செயல் பட்டால் அது அவர் கட்சிக்கும், அவருக்கும் நல்லதல்ல!

அடுத்து ஆதீனம் நமது பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகளில் நீக்கியது தான், நம் பண்பாடு, கலாச்சாரம் எல்லாம் சீர் கெட்டுப் போக காரணம் என்று சொல்லியிருக்கிறார்! அதை பரிசீலிக்க வேண்டிய கடமை தமிழ் நாடு முதல்வருக்கு மற்றவர்களை விட அதிகம் உள்ளது.

ஆங்கில வழி கல்வியில் வேலை வாய்ப்புக்கு முதலிடம் கொடுப்பது போல் ஒழுக்கத்திற்கு முதலிடம் கொடுக்கப் படுவதில்லை!

நம் கல்வி பாடத்திட்டத்தில் மாணவர்களுக்கு பத்து பதினைந்து வயசிற்குள் ஒழுக்கத்திற்கு முதலிடம் தரும்படி பல சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டும்!

எல்லா அரசுமே அரசு வருவாய் ஈட்டித் தரும் துறைகளுக்கு முக்கியத்துவம் தருவது போல் தமிழ் வளர்ச்சித் துறைக்கு முக்கியத்துவம் தருவதில்லை!

அதைத் தான் இந்த சட்ட மன்ற மானிய கோரிக்கை நிகழ்ச்சியிலும் சட்ட மன்ற உறுப்பினர்களின் ஆர்வத்தில் பார்த்தோம்! நம் பத்திரிகைகள் செய்திகளை வெளியிடும் அக்கறையிலும் நாம் பார்த்தோம்!

தமிழ் வளர்ச்சித் துறை வருவாய் இல்லாத துறை தான்! வெறும் செலவுகளை அதிகரிக்க மட்டுமே பயன் படும் துறை என்று நம் அரசியல்வாதிகள் அதில் அதிகம் அக்கறை காட்டுவதில்லை!

ஆனால் இன்றைய முதல்வர் அவர்கள் தமிழ்மொழி பற்றே இன்று அவர் ஆட்சிக்கு வர முக்கிய காரணம்!

அதனால் இன்றைய முதல்வர் தமிழ் வளர்ச்சித் துறை சிறப்பாக செயல்படவும், அதற்கு உறு துணையாக இருப்பவர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்தி,அவர்களுக்கு ஆதரவு கொடுத்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு பாடுபடுவதோடு, தாய் மொழிப் பற்று, ஒழுக்கம், பண்பாடு எல்லாம் மாணவர்களுக்கு சென்றடையும் வண்ணம் நம் கல்வியில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும்!

## அறிஞர்கள் உலகம்!

# ஆன்மீகக் களஞ்சியம் திரு.சுகிசிவம்!



மகாத்மா காந்தியைப் போல் கொல்லாமை, பொய் சொல்லாமை இருத்தல் வேண்டும். வாய்மை, உண்மை, மெய்மை எனும் மூன்றுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. தன் உடல் மொழியால் கூட பொய் சொல்லக் கூடாது. அதேபோல், பாரதி நம் தமிழுக்கு ஆற்றிய பெருமை அளப்பரியது. செந்தமிழ் நாடு எங்கள் நாடு எனப் பாடி நாட்டின் பெருமைகளைக் கூறுகிறார்.

சுவாமி விவேகானந்தரைப் பற்றிக் கூறுகையில், நீ ஆயிரம் கடவுளை வழிபட்டாலும் உன் மீது உனக்கு நம்பிக்கை வேண்டும். அதனால் மாணவ, மாணவிகள் விடா முயற்சியுடன் தன்னம்பிக்கை வேண்டும் என உரம் ஊட்டியவர். எனவே பாரதி, காந்தி மற்றும் சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளை மாணவ, மாணவிகள் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்றார்.

என் தந்தை ஓர் எழுத்தாளராக வாழ்க்கையைத் தொடங்கினார். அகில இந்திய வானொலியில் சேர்ந்த பின்னர்தான் ஒரு சுமுகமான வாழ்வு அவருக்குக் கிடைத்தது. அதனால் முழுநேர இலக்கியவாதியாக இருப்பது மிகவும் கடினம் என்பார் அவர். அவ்வாறு இருந்த பலரும் அப்போது வறுமையில் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதை அவர் சொல்லுவார். அதனால் நீ நிறையப் படி, சட்டம் படி என்று என்னை ஊக்குவித்தார்.

முதலில் என்னைச் சட்டம் படி என்று சொன்ன தந்தை, பின்னர் நான் முழுநேரப் பேச்சாளன் ஆகிறேன் என்று சொன்னபோது மறுக்கவில்லை. தந்தையின் நண்பர் ஒருவர் அவரிடம், “நீங்கள் பையனை இப்படியே விட்டு விட்டீர்கள். அவனும் மேடை மேடையாகச் சுற்றிக் கொண்டிருக்கிறான். நாளைக்கு அவன் எதிர்காலம் என்ன ஆவது? சாப்பாட்டுக்கு என்ன செய்வான்” என்று கேட்டார். அதற்கு என் தந்தை, “எனக்கு அவன் மீது நம்பிக்கை இருக்கிறது. அவன் பேசினால் வாரியார் மாதிரி பேசுவான். ஆனால் எழுதினால் ஜெயகாந்தன் மாதிரி எழுதுவான். அதனால் அவன்மீது பூரண நம்பிக்கை இருக்கிறது” என்று சொன்னார். அப்பா என்மீது வைத்திருந்த அந்த நம்பிக்கை எனக்கு மிகப்பெரிய moral support. நான் போக நினைத்த துறையில் எனக்கு எவ்வித இடைஞ்சலும் கொடுக்காதவர் என் தகப்பனார். இதை என்னால் மறக்க முடியாது.சிறுவயதில் நா. பார்த்தசாரதியின் நாவல்களை விரும்பிப் படிப்பேன். ஜெயகாந்தனின் எழுத்துக்கள் மிகவும் பிடிக்கும். சுஜாதாவின் எழுதும் முறை என்னைக் கவர்ந்த ஒன்று. பேச்சாளர்கள் என்றால் சமூகம் சார்ந்து சிந்திக்கக்கூடிய, சமூக நலத்துக்கான சிந்தனைகளை முன்வைக்கும் தமிழருவி மணியன், வெ. இறையன்பு இவர்களது பேச்சுக்கள்தான் எனக்கு மிகவும் பிடிக்கும். எங்கள் நிகழ்ச்சிக்கு இரு தரப்பான இளைஞர்கள் வருகிறார்கள். வெறுமனே பேச்சை ரசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வருபவர்கள் உள்ளனர். தங்கள் வாழ்க்கைக்கான உந்துசக்தியை, ஊக்கத்தைப் பெற வேண்டும், சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிலர் வருகிறார்கள். இப்போது நாங்கள் எங்களது நிகழ்ச்சிகளில் இரு தரப்பினரது விருப்பத்துக்கும் முக்கியத்துவம் இருக்குமாறு நிகழ்ச்சிகளை அமைக்கிறோம். முதலில் ஒரு சுற்று நகைச்சுவையாகப் பேசிவிடுவோம். இவர் போரடிக்க மாட்டார். இவர் நிகழ்ச்சியைக் கேட்பது நமக்கு கஷ்டத்தைத் தருவதாக இருக்காது என்ற நம்பிக்கையை முதலில் ஏற்படுத்தி விடுவோம். பின்னர் அவர்களுக்குத் தேவையானதை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதுதான். வெறுமனே நகைச்சுவையை மட்டுமே பேசிக் கொண்டிருந்தால் போதாது. அவர்களுக்குத் தேவையானது அவசியம் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு முதலில் பேச்சாளனுக்கு தைரியம் வேண்டும். நாம் நகைச்சுவை தவிர வேறு ஏதாவது பேசினால் கவனிப்பு இருக்காது, நம்மைக் கைகழுவி விடுவார்கள் என்ற எண்ணம் மாற வேண்டும். அதேசமயம் வெறும் சீரியஸாக மட்டுமே பேசிக் கொண்டிருந்தால் அதுவும் இளைஞர்களிடம் எடுபடாது. இது திட்டமிட்டுச் செயல்பட வேண்டிய ஒன்று.

–ஆர்.குணசேகரன்



சென்னை லயோலா கல்லூரி ஸ்ரீ ஜெயம் அறக்கட்டளை இணைந்து நடத்திய கேன்சர், இருதயநோய், சிறுநீரகநோய் போன்றவற்றுக்கான இலவச மருந்து இல்லா மருத்துவ ஆலோசனை முகாம் 30.04.2022 அன்று காலை 10மணிக்கு சென்னை நுங்கம்பாக்கம் லயோலா கல்லூரியில் நடந்தது. நிகழ்ச்சியில் மித்ரா குழும நிறுவனங்களின் தலைவரும், மித்ரா டைம்ஸ் மாத இதழ் ஆசிரியருமான திரு.எம்.எஸ்.மூர்த்தி பங்கு கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்தார். விழாவின் சார்பில் வெளியிடப்பட்ட மலரினை மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.கே.கிருஷ்ணன் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு இணைச் செயலாளர் திருமதி. எஸ்.அமிர்தஜோதி, இ.ஆ.ப., காவல் துணை ஆணையாளர் திரு.கே.பிரபாகர், இ.கா.ப., வருமான வரித்துறை ஆணையர் திரு.எம். ராஜன், ஐ.ஆர்.எஸ்., தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக தேர்வுக் கட்டுப்பாட்டாளர் பேராசிரியர் முனைவர் எம்.சக்திவேல், ஸ்ரீ ஜெயம் அறக்கட்டளை நிர்வாக டிரஸ்டி திரு.எம்.கே.ராஜேந்திரன், டிரஸ்டிகள் திரு.ஜோஸ்நிஜன், திரு.பி. முத்துக்கிருஷ்ணன் மற்றும் மருத்துவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



MITRA TIMES Tam & Eng Monthly
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month

# கோடைக் காலத்தை கோலாகலமாக கொண்டாடுங்கள்!




Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY